சோதனை தப்பர்த்தம் உண்மை

The Trial, The Twist and The Truth

(சோதனை, சூழ்ச்சி, சத்தியம்)

Bro. Paul Sudakar
Minister of God
சகோ. பால் சுதாகர்
தேவ ஊழியர்

"அவர்கள் உங்களை
ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்;
மேலும் உங்களை கொலை செய்கிறவன்
தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று
நினைக்குங் காலம் வரும்."
யோவான் 16 : 2

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (*E-Books*) **இலவசமாக (மத்தேயு 10:8)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (*Download*) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (*E-Book*) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (*Email*) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely **free of cost (Matt 10:8)** forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

THE TRIAL
THE TWIST
AND
THE TRUTH

சோதனை
தப்பர்த்தம்
உண்மை

(சோதனை, சூழ்ச்சி, சத்தியம்)

Bro. Paul Sudakar
Minister of God
சகோ. பால் சுதாகர்
தேவ ஊழியர்

தமிழாக்கம் :
சகோ. P. ஆசீர்வாதம்
(பாளையங்கோட்டை)

THE TRIAL, THE TWIST AND THE TRUTH

சோதனை, தப்பர்த்தம், உண்மை

(சோதனை, சூழ்ச்சி, சத்தியம்)

Bro. Paul Sudakar, Minister of God

"சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ்செய்யக் கூடாமல், சத்தியத்திற்கு அநுகூலமாகவே செய்யக்கூடும்". 2கொரி.13:8

"நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ?". கலா.4:16.

கிறிஸ்துவின் சரீரத்தில், அன்பான உடன் பரிசுத்தவான்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள். அந்த செப்டம்பர் மாதம் 5ம் நாள் 2006ல் "எபிரோனிலே" என்னை விசாரணை செய்து, கடைசியில் சபைக்குப்புறம்பாக்கின அன்று, உண்மையிலேயே என்ன நடந்தது என்பதை ஹைதராபாத், "எபிரோனில்" நிலவும் சூழ்நிலையைப்பற்றி அதிகமாய் கரிசனை கொண்டுள்ள அநேக விசுவாசிகள், விவரமாக நான் எழுத வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். என்னுடைய சகோதர்களின் காரியங்களை நான் "அம்பலப் படுத்தக்" கூடாதென்று தயங்கினேன். நாற்பது நாட்கள் கர்த்தரோடு ஜெபத்தில் தரித்திருந்த பிறகு, 'பொய்'களும், 'வதந்திகளும்' திரளான விசுவாசிகளைத் தவறாய் நடத்திவிடக்கூடாதென்று உணர்ந்து, பின்வரும் உண்மைகளை அனைவருக்கும் எழுதித் தெரியப்படுத்தும் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டேன். என்னுடைய திட நம்பிக்கையைப்பற்றி நீதி விசாரணை செய்யும் குழுவாக அமைந்தவர்கள் பின்வரும் ***பதினொரு சகோதரர்கள்:***

1. சகோ. K. பிலிப் - சென்னை - டிரஸ்ட் அங்கத்தினர்
2. சகோ. G.T. பெஞ்சமின் - ஹைதரபாத் - டிரஸ்ட் அங்கத்தினர்
3. சகோ. தியோடர் ரெஜினால்டு - சென்னை - டிரஸ்ட் அங்கத்தினர்

4. சகோ. F.C.S. பீட்டர் - ஹைதரபாத் - டிரஸ்ட் அங்கத்தினர்

5. சகோ. ஜாண் ஸ்டீவர்ட் - ஹைதரபாத்

6. சகோ. ஜாண் சுப்பாரெட்டி - ஓங்கோல்

7. சகோ. சாம்சன் - புரோடுடூர்

8. சகோ. ஜோசப் குரியன் - கடப்பா

9. சகோ. ஆண்ரூஸ் - சங்கா ரெட்டி

10. சகோ. தீமோத்தேயு - தெனாலி

11.சகோ. ஐசக் - விஜயவாடா

முன்கூட்டியே நன்றாகத் திட்டமிடப்பட்டுக் கூட்டின இந்தக் கூட்டத்தில், ஸ்தல சபையாகிய 'எபிரோனில்' இருந்து ஒரு நபர்கூட அழைக்கப்படவில்லை. அதேபோல், இரட்டைப் பட்டணங்களான ஐதராபாத்திலும், செக்கந்தராபாத்திலுமுள்ள கிளைச்சபைகளாகிய 60 சபைகளிலுமிருந்தும் ஒருவர் கூட பிரதிநிதிகளாக அழைக்கப்படவில்லை! "ஸ்தல (உள்ளூர்) சபை - தேவ ஒழுங்கு" என்ற தலைப்பில் நான் எழுதினதும், போதித்ததுமான என்னுடைய 'திடநம்பிக்கை'யைக்குறித்து என்னைக் 'கடூரமாக' கழங்கப்படுத்தி, பழித்துப் பேசினார்கள். என்னுடைய திட நம்பிக்கை, உறுதி, முற்றிலும் கர்த்தருடைய வசனத்தின் கர்த்தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. தேவ மனிதர்களான சகோ.பக்த்சிங், மற்றும் அவருடைய உடன் ஊழியர்களுடைய (சகோ.A.J.ஃபிளாக், சகோ. T.E.கோஷி) எழுத்துக்களின் முழு உறுதியளிப்புக்கும் ஏற்றதாயிருக்கிறது.

கிறிஸ்துவோடு என்னுடைய ஆவிக்குறிய யாத்திரையை முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்தேன். முப்பது வருடங்களுக்கு முன்பு, கர்த்தர் என்னை இந்த ஐக்கியத்திற்குள்- அதாவது, சகோ. பக்த்சிங் அவர்களோடு உழைத்த சபைகளோடு என்னை நடத்தினார். 1992ல் முழுநேர ஊழியத்திற்கு அழைக்கப்பட்டேன். நான் ஒரு முழு நேர ஊழியனாகவும், உடன் மூப்பனாகவும், கேரளாவிலுள்ள திருவனந்தபுரத்தில் பத்து ஆண்டுகள் ஊழியம் செய்தேன்.

என்னை ஐந்து 'டிரஸ்டீஸ்களில்' ஒருவராக நியமித்தபிறகு, மூத்த சகோதரர்கள் 2003ல் என்னை திருவனந்தபுரத்திலிருந்து மாறுதல் செய்து ஐதராபாத் வரும்படி கேட்டுக் கொண்டார்கள். என்னுடைய ஊழியமானது ஸ்தல சபைக்கு வெளியேயிருக்கும் (Extra-Local) என்று சொல்லப்பட்டேன். வழிநடத்திச்செல்லும் (Leadership) முன்னணிப்பொருப்பிலிருந்துகொண்டிருந்த படியினால், இந்த சாட்சிக்குக் 'கொள்ளைநோயாயிருந்து', தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிற 'பிரச்சனைகளைப்' பற்றி மனதில் தெளிவான உள்ளறிவு பெற்றவனாய் இருந்தேன். 'கொள்கையளவில்' நாம் புதிய ஏற்பாட்டு சபைகள் என்று அறிக்கையிட்டோம். எல்லா விசுவாசிகளும் 'ஆசாரியர்கள்', 'ஊழியர்கள்' என்று பிரசங்கித்தோம். கிறிஸ்து ஒருவரே ***ஒவ்வொரு சபைக்கும் சிரசு*** என்று உறுதிப்படுத்தினோம். ஒவ்வொரு சபையும் ஒரு ஸ்தல சபை என்றும், கிறிஸ்துவின் தலைமைதத்துவமானது, மூப்பர்கள் உதவிக்காரர்களாக ஏற்படுத்தப்பட்ட அதிகாரமுள்ளவர்களாலே அப்பியாசிக்கப்பட்டு வருகிறது என்று அறிவித்தோம். ஒவ்வொரு ஸ்தல (உள்ளூர்) சபையும் ***சுயாதீனமான*** சபை என்றும், எந்த ஒரு சபையும் இன்னொரு சபையை ***கட்டுப்பாடு*** செய்ய முடியாது என்றும் அறிக்கையிட்டோம். ***ஆனால், நடைமுறையில் நாம் பரிதாபகரமான முறையில் தவறிவிட்டோம்.***

இதற்காக மனம் வருந்தி, சீக்கிரமாக ***தெய்வீக ஒழுங்கிற்குள் வருவதற்குப்பதிலாக, இந்தத் தெய்வீக ஒழுங்கைச் செயல்படுத்தாமலிருந்த குற்றத்தை நியாயப்படுத்த, 'சாக்குப்போக்குகள் சொல்ல துணிந்து விட்டோம்.*** ஐதராபாத்திலே, ஐம்பத்தாறு ஆண்டுகளாக இருக்கின்ற 'எபிரோன்' ஆராதனை வீட்டிற்குக், கடந்த இருபதாண்டு காலமாக ***மூப்பர்களோ, உதவிக்காரர்களோ கிடையாது!*** வரவேற்கப்படா விட்டாலும் கூட, கடந்த மூன்று ஆண்டுகளாக, நான் இந்த ஆபத்தான 'குறையை,' மூத்த சகோதரர்களிடத்தில் அடிக்கடி *முக்கியப்படுத்திச் 'சுட்டிக்காட்டினேன்.* ஆனால் ஒன்றும் நடக்க வில்லை. கடைசியாக நடந்தது என்னவென்றால், ஐக்கியத் திலிருந்தும், ஊழியத்திலிருந்தும் என்னை வெளியேற்றினதுதான்!

சில நாட்களுக்குமுன்பு, தெய்வீக ஒழுங்கை மறுபடியும் சபையில் நிலைநாட்ட அங்கே ஒரு 'கோரிக்கை' விடப்பட்டு, அபிஷேகிக்கப்பட்ட மூப்பர்களில் இன்று இருக்கிற ஒரே மூப்பரான சகோ. G.T.பெஞ்சமின் அவர்களுக்கு, மூத்த சகோதரர்கள் அதிகாரம் கொடுத்து, மூப்பர்கள், உதவிக்காரர்களை ஏற்படுத்துவதற்காக, சில பெயர்களைத் தேர்வு செய்யச் சொன்னார்கள். எல்லாவித நல் நம்பிக்கையுடன் சகோ. G.T.பெஞ்சமின் அவர்கள் தேர்வு செய்த அந்த நபர்களை ஒரு ஞாயிறு காலை, சபையில் அறிவித்தார். சபையிலே ஒரு 'சிறு பிரிவினர்' எழுந்து இதை எதிர்த்துக் கலகம் செய்தார்கள். சகோ. G.T.பெஞ்சமின் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, "சிலரைத் தேர்வு செய்து சபையில் அறிவியுங்கள்" என்று சொன்ன அதே சகோதரர்கள், இப்பொழுது சகோ. G.T.பெஞ்சமின் அவர்களை இணங்கச் செய்து, "சபையில் சமாதானம் காணப்படுவதற்காக, நீங்கள் கொடுத்த அறிவிப்பை ரத்து செய்யுங்கள்" என்று சொன்னார்கள். அங்கே மாற்றுக் கருத்தோடு கலகம் செய்தவர்களின் விருப்பம் என்னவென்றால், ***"முழுநேர ஊழியர்கள் மட்டும்தான் சபையைக் கட்டுப்பாடு செய்து சபையை நடத்த வேண்டும்" என்பது.*** இது வேத வசனத்தின்படி சரியா? இந்தக் காலக்கட்டத்தில், வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து தொடர்ச்சியாக வேத ஆராய்ச்சி நடத்தக் கர்த்தர் என்னை ஏவினார். இந்தச் சூழ்நிலையில் ஸ்தல (உள்ளூர்) சபையில் தேவனுடைய ஊழியத்தைப்பற்றி செய்தி கொடுத்துக் கொண்டிருந்தேன். மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்கிற 'தலைமையேற்று நடத்துபவர்களின்' அமைப்பு நிலை சம்பந்தமாக, (Leadership Structure) தொடர்ச்சியான வேதபாடங்களை நடத்தும்படி கர்த்தர் என்னை நடத்தினார். சபை நடுவிலே நல்லதொரு ஏற்றுக் கொள்ளுதலும், பாராட்டுதலும் இருந்தது. ***சில முழு நேர ஊழியர்கள் கூட, 'ஏற்ற சமயத்தில் கொடுக்கப்பட்ட இந்த வேதபோதனை, எங்கள் ஜெபங்களுக்கு கிடைத்த பதில்'*** என்று கருத்துக்கூறினார்கள்.

இரட்டை நகரங்களிலுள்ள ஸ்தல சபைகளுக்கு இந்தச் செய்தி எட்டியது. எல்லாருடைய நன்மைக்காகவும், இந்த வேத பாடங்களை மற்ற எல்லா சபைகளிலும் மறுபடியும் கற்றுக் கொடுக்கும்படி எனக்குப் புதிய வேண்டுகோள்கள் வந்தன. வேண்டுகோளுக்கிணங்க சகோ. G.T.பெஞ்சமின் அவர்கள், மாலக்பேட்டையிலுள்ள (Malakpet) 'ஓரேப்' ஆராதனை வீட்டில் அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்யச் சம்மதித்தார். சுமார் இருநூறு விசுவாசிகள், பெரும்பாலும் இரட்டை நகரங்களிலுள்ள சபைகளிலிருந்து பொறுப்புள்ள சகோரர்கள், வந்து கலந்து கொண்டார்கள். கூட்டத்தின் முதற்பகுதியில் சகோ. G.T.பெஞ்சமின் அவர்கள், எப்படி சகோ. பக்த்சிங் அவர்கள் ஒவ்வொரு சபையிலும் ஸ்தல மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் ஏற்படுத்தி, தெய்வீக மாதிரியைக் கொண்டுவர வாஞ்சித்தார்கள் என்பதைப் பற்றி சாட்சியாகக் கூறினார். ***அதேசமயத்தில், இந்த 'ஏற்பாட்டிற்கு' எப்படி அங்கே 'எதிர்ப்பு' இருந்தது என்பதையும் பகிர்ந்து கொண்டார்கள்.*** கூட்டத்தின் இரண்டாவது பாகத்தில், நான் என் கைப்பட எழுதிவைத்திருந்த அதே பழைய சத்தியங்களை பிரசங்கித்தேன். கூட்டத்தின் முடிவில் அநேக ஜனங்கள் என்னுடைய குறிப்புகளின் 'நகல்கள்' (Copies) தங்களுக்கு வேண்டும் என்று விரும்பினார்கள்.

சிலவாரங்கள் கழித்து, மூப்பர்கள், உதவிக்காரர்களை ஸ்தல (உள்ளூர்) சபையிலே ஏற்படுத்துதல் சம்பந்தமான இந்தப் புதிய உபதேசத்தை எதிர்த்து ஒரு பெரிய புயலே உருவானது. நிரூபிக்கப்படாத குற்றச்சாட்கள், உண்டாக்கப்பட்டு, நான் அருமை சகோ.பக்த்சிங் அவர்கள்ளையும், முழுநேர ஊழியர் களையும் தாக்கி எழுதினதாக என்னை குற்றப்படுத்தினார்கள். (நான் இப்படி ஒருபோதும் செய்யாதபடி தேவன் என்னைக் காத்துக் கொள்வாராக. நான் அப்படி ஒருபோதும் செய்யமாட்டேன்). 'எபிரோனில்' (ஐதரபாத்) தங்கியிருக்கிற சுமார் 120 முழு நேர ஊழியர்களை வெளியேற்ற நான் விரும்பினதாக என்மேல் நிருபிக்கமுடியாத குற்றச்சாட்டுகளையும் கூறினர்கள்!. ***நானும் ஒரு முழு நேர ஊழியனாக அங்கேயிருக்கும் போது, நான் எப்படி இந்த விதமாகச் சொல்ல முடியும்?*** நானும் என்

மனைவியுமாக இருவரும், 'இண்டர் நேசனல் ரெசிடென்சியல் எட்ஜீக்கேஷனல் இன்ஸ்டிடூசனில்' பணியாற்றிவந்த எங்கள் வேலைகளை ராஜினாமா செய்து விட்டு ஊழியத்திற்கு வந்தோம்! (International Residential Educational Institution)

இவர்கள் சொல்லுவது ஒரு பொய்! நான் சகோ.பக்த்சிங் அவர்களின் நற்பெயரை களங்கப்படுத்தினேன், அல்லது முழுநேர ஊழியர்களுக் எதிராக நான் பேசினேன் என்று யாராவது நிரூபிப்பார்களானால், நான் பகிரங்கமாக மன்னிப்புக்கேட்க ஆயத்தமாயிருக்கிறேன்.

அன்பான சகோதர, சகோதரிகளே, நான் ஒருபோதும் செய்யாத 'குற்றத்திற்காக' என்னைத் தயவு செய்து குற்றப்படுத்தாதீர்கள். பின்னர் சகோ. K. பிலிப் அவர்கள் என்னோடு பேச விரும்பினார்கள்.

தொலை பேசி மூலம் அவர் என்னோடு பேசி, ***நான் போதித்து கொண்டிருக்கும் வேதாகம 'விளக்க உரைகளும்', 'விரிவான விளக்கங்களும்' தொர்ந்து நடக்க வேண்டும் என்று தெரிவித்தார்.*** ("Telephonically he informed me that my 'EXEGESIS' and 'EXPOSITION' should continue.") மேலும் அவர் சொன்னார், சில சகோதரர்கள் என்னிடம் சில காரியங்களைக் கேட்டுத் தெளிவுபெற வேண்டும் என்று விரும்புவதாகவும் கூறினார். (கேள்விகள் கேட்பதற்காக) 'டிரஸ்டீஸ்' களோடு (சகோ. G.T.பெஞ்சமின் நீங்கலாக) மற்ற சிலருடைய பெயர்களையும் சேர்க்க வேண்டும் என்று சகோ. K.பிலிப் அவர்கள் தங்கள் கருத்தைக் கூறி, அவர்கள் அனைவரும் என்னிடம் கேள்விகள் கேட்பார்கள் என்று கூறினார். நான் சகோ K.பிலிப் அவர்களை நோக்கி, 'நான் மீதமுள்ள நான்கு 'டிரஸ்ட்' அங்கத்தினர்களையும் முதலாவது சந்திக்கிறேன்,' என்று சொன்னேன். இந்த வேண்டுகோளை சகோ. K. பிலிப் அவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. (Turned down). அவர் சொன்னார், ***"இது ஒரு 'சாதாரணமான' விளக்கம் கேட்பது மட்டும்தான்"*** என்றார். அதற்காகக் குறிக்கப்பட்டநாள், செப்டம்பர் 5, 2006.

நான் அன்று (05-09-06) காலை 'எபிரோனுக்கு' 9:20 மணிக்கு வந்தேன். நான் வந்து பார்க்கும் போது அங்கே அநேக முழுநேர ஊழியர்கள் (சுமார் 40 பேர்கள்) இருந்தார்கள். காலை 10.30 மணிக்கு நான் 'அந்தியோகியா' கட்டிடத்திலுள்ள முதலாம் மாடியிலிருக்கும் மூப்பர்களின் ஜெப அறைக்கு வரக்கட்டளை பெற்றேன். அறைக்குள் சென்றவுடனே, நான் ஏற்கனவே சொன்ன அந்த பதினோருபேர்களும் அமர்ந்திருந்தனர். நான் கூட்டத்தின் தலைவராகிய (Chairman) சகோ. K. பிலிப் அவர்களிடம் வேண்டிக் கொண்டது என்னவென்றால், "நான் அந்த மற்றவர்க ளெல்லாரோடும் பேசுவதற்கு முன்பு, முதலாவதாக இந்த நான்கு 'டிரஸ்ட்' உறுப்பினர்களோடு சில நிமிடங்கள் பேச அனுமதிக்க வேண்டும்" என்றேன். அங்கேயிருந்த 'டிரஸ்ட்' உறுப்பினர்க ளல்லாதவர்கள் அறையை விட்டு வெளியேறினர்.

துன்பமாக மாறின கூட்டம்!

நான் சேர்மென் அவர்களை (சகோ.K.பிலிப்) ஜெபத்தில் நடத்தும்படி கேட்டுக் கொண்டேன். என்னுடைய தூண்டுதலின் பேரில் அவர் ஜெபித்தார். மற்றவர்கள் வந்து சேர்ந்து கொள்வதற்கு முன்பு, சம்பாஷணை இந்தவிதமாக நடைபெற்றது.

பால் சுதாகர்: சகோதரனே, (சேர்மன் சகோ. K. பிலிப் அவர்களைப் பார்த்து) இந்தக் கூட்டம் எதற்காகக் கூட்டப்பட்டது என்று தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள்.

சேர்மன் : (சகோ.K.பிலிப்) 'ஸ்தல சபை' என்ற பத்திரத்தில் உள்ள சில போதனைகள் குறித்துச் சகோதரர்கள் சில விளக்கங்கள் கேட்க விரும்பினார்கள்.

பா.சு. : சகோதரனே, நான் எழுதியிருக்கிறவைகளை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா?

சேர் : *அது சரிதான், ஆனால் நடைமுறைப்படுத்து வதற்கு அநேக கடினமான காரியங்கள் இருக்கின்றன. மூப்பர்கள் ஆகக்கூடிய அளவிற்கு ஜனங்கள் இன்னும் பக்குவத்திற்கு (முழு வளர்ச்சி) வரவில்லை. நாம் காத்திருக்க வேண்டியிருக்கிறது.*

பா.சு. : தேவனுடைய வசனத்தை 'ஒதுக்கித்தள்ளிவிட்டு' ஜனங்கள் முழுவளர்ச்சிக்கு வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டுமா? காத்திருப்பதின் மதிப்பை நான் பாராட்டுகிறேன். ஆனால் இருபது வருஷசங்களுக்கும் மேலாகக் காத்திருக்கும் ஒரு 'காத்திருப்பை' என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

சேர் : ***"இருக்கலாம், நம்முடைய சுய-மையம் தான் தெய்வீக ஒழுங்கை உள்ளே கொண்டுவர நம்மை தடை செய்கிறது."*** (Self - Centeredness).

பா.சு. : (நான் நினைத்தேன்... சரியாகச் சொன்னீர்கள்) சரிதான். தெய்வீக ஒழுங்கை உள்ளே கொண்டுவர நம்முடைய சுய-மையத்தைத் ('நான்' என்கிற எண்ணம்) தவிர நம்மைத் தடைசெய்வது வேறொன்றும் கிடையாது. இருபது ஆண்டுகள் கழித்தும் மூப்பர்கள், உதவிக்காரர்களை ஏற்படுத்தாமல் இருந்து கொண்டு, ஒரு புதிய ஏற்பாட்டு சபை என்று அழைப்பதற்கு நாம் வெட்கப்பட வேண்டும்! (அடுத்து நான் எழுதின புத்தகத்தைக்காட்டி) இந்தப்புத்தகத்தில்,

"நான் எங்கே தேவனுடைய வார்த்தையை விட்டு விலகிச் சென்றேன் என்று தயவு செய்து எனக்குக் காட்டுங்கள் பார்க்கலாம்."

சேர் : "சகோ. தியோடர் இப்பொழுது பதில் சொல்வார். சொல்லுவதற்கு அநேகக் காரியங்கள் அவரிடம் உண்டு."

பா.சு. : "சகோதரன் தியோடர் அவர்களே, எங்கே (எந்தக்காரியம்) நீங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்பதை எனக்குக் காட்டுங்கள் பார்க்கலாம்."

தியோடர் : "இப்பொழுது நான் சொல்லமாட்டேன். நீங்கள் இந்தப் போதனையை வெளிப்படையாகக் கொண்டு

வந்து விட்டீர்கள். நானும் கூட மற்றவர்கள் முன்னிலையில் தான் உங்களை வெளிப்படையாகக் கேட்பேன்."

பா.சு. : "சகோதரனே, நான் உங்கள் நண்பனும், உங்களோடு உடன் 'டிரஸ்டீ'யுமாக இருக்கிறேன். தயவு செய்து இப்பொழுது எனக்குச் சொல்லுங்கள்."

சகோ. G.T. பெஞ்சமின் அவர்கள் இப்பொழுது தலையிடுகிறார். "சகோதரன் (பால் சுதாகர்) எழுதியிருப்பது, வேதவசனத்தின்படிதான் இருக்கிறது. உங்களுக்கு (தியோடருக்கு) ஏதாவது மறுப்பு (தடை) இருக்குமானால் அதை இப்பொழுதே கூறுங்கள்."

சேர் : (சகோ. தியோடருடன் சேர்ந்து கொண்டு) "இந்தப் பத்திரத்தை (ஸ்தல சபை-தெய்வீக ஒழுங்கு) எழுதுவதற்கு முன்பு எங்களிடத்தில் யோசனை கேட்டிருக்க வேண்டும்." (பா.சு குறிப்பு:- மற்றவர்கள் சுற்றறிக்கையாகப் பரப்பினது என்னுடைய கையெழுத்தாலான குறிப்புகள் என்பதை மனதில் கொள்ள வேண்டும் (My Hand written Notes)

பா.சு : ***"தேவனுடைய வசனத்தை நான் பிரசங்கிக்க உங்களிடத்தில் அனுமதி பெற வேண்டுமோ? நான் பிரசங்கித்த இவைகள் 'புதிய' சத்தியங்களல்ல. நான் எங்கே தவறினேன் என்பதை எனக்குக் காட்டுங்கள்."***

சேர் : "தலைமை நிலையம் (Head - Quarters) இல்லை என்று சொல்லியிருக்கிறீர்கள்"

பா.சு. : (நான் எழுதின புத்தகத்தின் பெயரை நான் சுட்டிக் காட்டி) "சகோதரனே, இந்த புத்தகமானது ஸ்தல சபை-தெய்வீக ஒழுங்கைப்பற்றிக் கூறுகிறது. நான் வேலையின் தோற்றத்தைப் (நோக்கத்தை) பற்றி இதில் எழுதவில்லை. (Work Aspect). வேலையைப்

பொருத்தளவில் அங்கே ஒரு நிர்வாகப்பகுதி மையம் (Regional Centre) உண்டு."

சேர் : "மாலக்பேட்டையில் (Malakpet) நீ ஏன் கூட்டம் ஏற்பாடு செய்தாய்?"

(சகோ. G.T. பெஞ்சமின் இப்பொழுது தலையிட்டு பதில் சொல்கிறார்)

G.T.B. : "மாலக்போட்டையில் கூட்டம் ஏற்பாடு செய்தது பால் சுதாகர் அல்ல. அதை நான் தான் ஏற்பாடு செய்தேன். நான் அந்தக் கூட்டத்தைக் கூட்டினேன். இரட்டை நகரங்களில் (ஐதரபாத்-செக்கந்தராபாத்) அங்கே அறுபது சபைகளுக்கு மேலாக இருக்கின்றன. மூன்று சபைகளைத் தவிர மற்ற அனைத்துச் சபைகளும் பொருப்புள்ள சகோதரர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்களுக்குப் போதிப்பதற்காக நான் தான் சுதாகரை அழைத்தேன்." (இந்தநேரத்தில், சில சகோதரர்கள், "நாங்கள் ஏன் கிரிமினல் குற்றவாளிகள் போல் வெளியே காத்திருக்க வைக்கப்பட்டோம்" என்று கேட்டுக்கொண்டு கோபா விகாரத்தோடு உள்ளே வந்தார்கள். சேர்மன் அவர்கள் அவர்களைப் பொறுமையாயிருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்)

சேர் : "வெளியே காத்துக்கொண்டிருக்கிற மற்றவர்கள் எங்களோடு வந்து சேரட்டும்."

பா.சு. : (சேர்மன் அவர்களைப் பார்த்து) "சகோதரனே, நீங்கள் மற்றவர்களை உள்ளே இரண்டு நிபந்தனைகளின் பேரில் அழைக்கலாம். முதலாவது நிபந்தனை, நான் அவர்களுடைய கேள்விகளையெல்லாம் ***கேட்டுக் கொண்டுதானிருப்பேன். ஆனால் நான் இப்பொழுது பதில் சொல்ல மாட்டேன்."***

இரண்டாவது நிபந்தனை, ***நான் என்னுடைய விளக்கத்தை முதலாவது 'புரஸ்டீஸ்' களுக்குத்தான்***

கொடுப்பேன். பின்னர் அதைப்பற்றி மற்றவர்களுடன் பேசுவேன். (நான் இப்படி வேண்டிக்கொள்வதற்குக் காரணங்கள் உண்டு. முதலாவது, ஜனங்கள் மிகவும் கோபாவேசத்தோடிருக்கும் போது, அவர்களுக்குக் காரியங்களை விளக்கிக் காட்டுவது என்பது சிரமமான ஒன்றாகும். இரண்டாவதாக, சகோ. G.T. பெஞ்சமின் அவர்களைந்தவிர, மற்ற 'டிரஸ்டீஸ்' களுக்கு நான் எழுதின கருத்துக்களில் என்ன குறையிருக்கிறதென்று மறுப்புக்கூற விருப்பமில்லை. ஆனால் கோபாவேசத்தோடு வந்திருக்கிற மற்றவர்கள் முன்னிலையில் பேச வேண்டும் என்று விரும்பினார்கள். கோபங்கொண்டிருக்கும் திரள் கூட்டத்தில் ஒருவரும் ஒருவருக்கும் செவிகொடுக்கமாட்டார்கள் என்பதை அறிவோம்.)

சேர்மன் K. பிலிப் அவர்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்கள்.

அதன்பிறகு மீதமுள்ள ஏழுபேர்கள் (முந்திய பதினோரு பேர்களில்) உள்ளே வர அனுமதிக்கப்பட்டார்கள். சகோ. தியோடர் அவர்கள் என்னுடைய பத்திரத்தில் (புஸ்தகத்தில்) அவர் கண்டுபிடித்த முரண்பாடுகளை இரண்டு தாள்களில் எழுதி வந்து அதை வாசித்தார். அவர், "சகோ. C.D. பெஞ்சமின் என்பவர், 'அக்ராய்டு' என்பவரது தவறான போதனையால் இழுக்கப்பட்ட ஒருவர்" என்று அவரைப்பற்றிக் கூறினார். உடனே சகோ. G.T. பெஞ்சமின் அவர்கள் குறுக்கிட்டு, ***"சகோ. தியோடருக்கு, சகோ. C.D. பெஞ்சமின் அவர்களைப் பற்றிக்கருத்துக் கூற எந்த உரிமையும் கிடையாது. காரணம், சகோ. C.D. பெஞ்சமின் யார் என்பதே சகோ. தியோடருக்குத் தெரியாது"*** என்று கூறினார். பின்னர், ஒருவர் பின் ஒருவராக நான் எழுதின (புஸ்தகத்தை) கருத்துக்களைப்பற்றி குறை கூறினார்கள். ***'எல்லா விசுவாசிகளும் தேவ ஊழியர்களே'*** என்று நான் எழுதின கருத்தைப் பலமாக தாக்கிப் பேசினார்கள். ***அவர்களுடைய கருத்துப்படி, 'தேவ ஊழியர்,' அல்லது 'தேவனுடைய ஊழியர்' என்ற பட்டம் அல்லது தகுதியானது முழுநேர ஊழியர்களுக்கு மட்டும் தான் முன்பதிவு செய்யப்பட்டது என்கிறார்கள்.***

முழுவதும் அலங்கோலமாகப் போய்க்கொண்டிருக்கிற இந்த சூழ்நிலையில், சகோ. G.T. பெஞ்சமின் அவர்களும் சேர்மன் சகோ. K. பிலிப் அவர்களும் ஒழுங்கை/அமைதியைக் கொண்டு வரப்பிரயாசப்பட்டார்கள். ஆனால் செவிகொடுக்க ஒருவருக்கும் விருப்பமில்லை. "இவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது" என்று சகோ. G.T. பெஞ்சமின் அவர்கள் வெகு தெளிவாக சொன்னார். "***இவர்களுடைய உள்ளத்திலிருக்கிற வன்மமும், வெறுப்புமே பால்சுதாகர் மேல் குற்றம் சாட்டும்படி தூண்டுகிறது***" என்றும் சொன்னார்.

உரத்த சத்தத்தில், பயமுறுத்தும் தொனியோடு அவர்கள் என்னைக் குற்றம் சாட்ட ஆரம்பித்தார்கள். மிகுந்த பரியாசமும், பழிச்சொற்களும் என்மேல் கூறினார்கள். அவர்களுடைய குற்றச்சாட்டுகள் யாவும் தெளிவற்றவைகள், அவைகளில் சிலவற்றை இங்கே தருகிறேன்.

1. "நீ சகோ. பக்த்சிங் அவர்களை 'கள்ளத்தீர்க்கத்தரிசி' என்று அழைத்து, அவருடைய நற்பெயரைக் களங்கப்படுத்தி விட்டாய்."
2. "நம்முடைய சபைகளுக்குள்ளே நீ தவறான உபதேசங்களைக் கொண்டு வந்து விட்டாய்."
3. "வேதாகமத்திலுள்ள சாதாரண சத்தியங்கள் கூட உனக்குத் தெரியாது."
4. "வேதவாக்கியங்களை எப்படி வியாக்கியானம் செய்வது என்பது உனக்குத் தெரியாது."
5. "நீ எங்கேயெல்லாம் ஊழியம் செய்தாயோ அங்கேயெல்லாம் குழப்பமும், பிரிவினையும் இருக்கிறது."
6. "தேவ ஊழியர்களாகிய எங்களுக்கு எதிராக, ஜனங்கள் கலகம் செய்யும்படிக்கு நீ போதிக்கிறாய்."
7. "உனக்குத் தலையறிவு உண்டு, ஆனால் அனுபவம் கிடையாது."
8. "நம்முடைய சபைகளிலிருக்கிற சமாதானத்தை நீ குலைத்து விட்டாய்."

9. "நீ உன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இந்தச் சபையின் ஸ்தாபகர் என்று எண்ணிக் கொள்கிறாயா?"

இப்படிப்பட்ட முரட்டுத்தனமான, மரியாதையற்ற வார்த்தைகளை நான் ஒருபோதும் கேட்டதில்லை. அதுவும் விசேஷமாக, முழுநேர ஊழியர்களின் நாவுகளிலிருந்து! நான் அதிர்ந்துபோய், அமைதியாக உட்கார்ந்திருந்தேன்.

இந்தக் கிளர்ச்சி மிகவும் அதிகமாயிருந்தது. வெளியே வராந்தாவில் நின்று கொண்டிருந்தவர்கள் இந்த நாடகத்தைக் காண்பதற்குக் கதவுகளைத் திறந்தார்கள்.

கோபமான உரத்தகுரல் இப்பொழுது மிகவும் கடுமையாக இருந்தது.

'இராஜினாமா செய்து விட்டுப்போ' ஏன் வாயைத் திறவாதிருக்கிறாய்? 'உனக்குப் பேச முடியாதா' இராஜினாமா செய்து விட்டுப்போ.'.

இந்த நேரத்தில் சேர்மன் (K.பிலிப்) அவர்கள் சற்று கோபப்பட்டார்கள். அவர் சொன்னார்.

(சேர்மன்) 'பால்சுதாகர் இராஜினாமா செய்தால், நானும் இராஜினாமா செய்வேன்.'

இப்பொழுது அவர்கள் சேர்மன் அவர்களிடமாய்த் திரும்பி, அவர்களைப் பார்த்து கூச்சலிட்டார்கள். அவர்கள், தங்கள் இருக்கைகளை விட்டெழுந்து, சகோ. K. பிலிப் அவர்களை நெருங்கிவந்து, கோபத்தோடு தங்கள் கையை நீட்டி, அவரைப் பார்த்து "இராஜினாமா செய்துவிட்டு போங்கள். நீங்களும் கூட இராஜினமா செய்யத்தான் வேண்டும். அதை இப்பொழுதே செய்யுங்கள். எங்களை நீங்கள் பயமுறுத்துகிறீர்களா? ஒவ்வொரு முறையும் இதே காரியத்தைத்தான் சொல்லுகிறீர்கள். 'நான் இராஜினாமா செய்துவிடுவேன், நான் இராஜினாமா செய்து விடுவேன் என்று. அதை இப்பொழுது செய்யுங்கள்." என்றார்கள்.

"நீங்கள் எங்களை ஏமாற்றி விட்டீர்கள். நீங்க்ள் இந்த மனிதனை ஒரு 'டிரஸ்டீயாக' (நான்கு வருடங்களுக்கு முன்பு) ஏற்படுத்தும் போதே நாங்கள் எல்லாரும் அதை எதிர்க்க

வில்லையா? அப்பொழுது நீங்கள் எங்களுக்கு என்ன வாக்குக் கொடுத்தீர்கள்? அவரை ஒரே ஒரு வருஷத்திற்கு மட்டும் வைத்திருந்து விட்டு, பின்னர் எடுத்துவிடுவேன் என்று சொன்னீர்கள். உங்களுடைய வாக்குறுதிக்கு என்ன நேர்ந்தது? அவரை நீங்கள் நிரந்தரமாக்கினீர்கள். நீங்கள் எங்களை ஏமாற்றி விட்டீர்கள். நம்முடைய சபைகளுக்கு அவர் ஏற்படுத்தின நஷ்டத்தைப்பாருங்கள்."

இப்பொழுது அவர்கள் மறுபடியும் என்னைப் பார்த்து திரும்பி விட்டார்கள்.

"இப்பொழுது எங்களுக்குப் பதிற்சொல். எங்களுக்குப் பதிற்சொல்லாமல் இந்த அறையை விட்டு உன்னை நாங்கள் போக அனுமதிக்க மாட்டோம். பேசு, உன் வாயைத்திற."

(இப்பொழுது அவர்களுடைய அபாயகரமான பார்வையும், பயமுறுத்தும் சத்தமும் உந்தி எழுந்தது)

சகோ. G.T. பெஞ்சமின் அவர்கள் மிகவும் கலக்கம் அடைந்தவராய், சத்தமிட்டுச் சொன்னார்:

"என்ன இது! நீங்கள் அவரை (பால்சுதாகரை) சிலுவையில் அறைய விரும்புகிறீர்களா?" (crucify) அந்த திரள் கூட்டத்தின் கடுங்கோபம், இப்பொழுது சகோ. G.T. பெஞ்சமின் மேல் திரும்பியது.

"நீங்கள் அவனோடு (பால்சுதாகர்) சேர்ந்து கொண்டு, அவனைக் கெடுத்துவிட்டீர்கள்." சகோ. G.T. பெஞ்சமின் அவர்கள், "அவர் நம்முடைய சகோதரன் அல்லவா? ஏன் நாம் அவரை மன்னிக்கக் கூடாது?" என்று அவர்ளை சமாதானப்படுத்த முயன்றார். அவர்கள் எல்லாரும் இணைந்து கொண்டு ***"இல்லை, இல்லை, இல்லை"*** என்று உரத்த குரலில் கூச்சலிட்டார்கள்.

"இப்பொழுது எங்களுக்குப் பதிற்சொல்", என்று மறுபடியும் என்னைப் பார்த்து கூக்குரலிட்டார்கள். "எவ்வளவு நேரம் எங்களைக் காத்திருக்கப் பண்ணுவாய்?" என்றார்கள்.

நான் (பால் சுதாகர்) சேர்மன் அவர்களை நோக்கினேன். "நான் கேட்டுக் கொண்டுமட்டுமிருப்பேன், பதில் சொல்ல

மாட்டேன் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா?" என்றேன். சேர்மன் (K. பிலிப்) அமைதியாயிருந்தார்கள். சிறிது நேரம் பொறுத்து, நான் மிகுந்த ஏமாற்றம் அடையும் அளவிற்கு சேர்மன் பதிற்சொன்னார். என்னை (பால்சுதாகர்) குற்றப்படுத்து கிறவர்களைப் பார்த்து (சகோ. K. பிலிப் அவர்கள்) சொன்னார்கள், "அவரை நாம் என்ன செய்வது?" ... (சற்றுநேரம் பொறுத்து, அவர் மறுபடியும் தொடர்ந்தார்).

"நீங்கள் அனுமதித்தால், நான் (K. பிலிப்) ஒன்று அல்லது இரண்டு காரியங்களை யோசனையாகக் கூறுகிறேன்.

"முதலாவதாக, அவர் (பால்சுதாகர்) எழுதின அந்த புஸ்தகத்தை' அவர் திரும்பப் பெறும்படி (withdraw) நாம் கேட்போம்."

இரண்டாவதாக, ஒரு குறிப்பிட்ட காலம் வரை (for a period of time) நாம் அவரை (பால்சுதாகரை) எல்லாவித ஊழியத்திலி ருந்தும் விலக்கிவைப்போம்." ***நான் (பால்சுதாகர்) மிகவும் அதிர்ச்சியடைந்தேன். இதுதான் அவர்கள் உண்மையிலேயே விரும்பினது. நான் என்னுடைய காரியங்களுக்காகப் பேசவோ அல்லது பதிற்சொல்லவோ, எனக்கு நியாயமான அல்லது திருப்திகரமான ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் கொடுக்கவில்லை. உலகப்பிரகாரமான நீதிமன்றத்தில் கூட, குற்றம் சாட்டப் பட்டவனுக்கு, ஒரு சந்தர்ப்பம் கொடுத்து, அவனுக்காக அவன் பதில் சொல்ல வாய்ப்பு கொடுக்கப் படுகிறது. எனக்கு ஏன் சமயம் கொடுக்கப்படவில்லை?.***

'நான் கேட்டுக்கொண்டு (கவனித்துக்கொண்டு) மட்டும்தான் இருப்பேன், பதிற்சொல்ல மாட்டேன்' என்று சொன்னதை, சேர்மன் (K. பிலிப் அவர்கள்) ஆரம்பத்திலேயே ஒத்துக்கொண்டார் அல்லவா? (ஓரிடத்திலே சகோ K. பிலிப் அவர்கள் அந்தக் கூட்டத்தைப் பார்த்து, "சகோ. பால்சுதாகர் அவர்கள், கவனித்துக் கொண்டு மட்டும்தானிருப்பார், பதில் சொல்ல மாட்டார்" என்று சொல்ல முயன்றார். ஆனால் அதை அங்கே யார் கவனித்துக் கேட்பார்கள்?

"நீங்கள் அவரை (பால்சுதாகரை) இங்கே ஊழியம் செய்யவிடாதபடி நிறுத்தினாலும், அவருடைய ஊழியத்திற்காக ஆயிரக்கணக்கில் வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள்"

என்று சகோ. G.T. பெஞ்சமின் அவர்கள் என்னைப் பாதுகாத்துப் பேசினார்கள். உடனடியாகக் கூட்டத்திலுள்ளவர்கள், நம்முடைய சபைகளுக்கெல்லாம் அறிவிப்புக் கொடுத்து, என்னை அவர்கள் மத்தியிலே உபயோகிக்கக் கூடாது என்று தீர்மானித்தார்கள்.

"அவன் நம்முடைய சபைக்களுக்குத் தீங்கு செய்து விட்டான்"

"அவன் போகட்டும்"

"டிரஸ்டீஸ் பொறுப்பிலிருந்து அவன் இராஜினாமா செய்யட்டும்"

"சபையை விட்டு அவன் போகட்டும்" என்று மறுபடியும் கூச்சலிட்டார்கள்.

சகோ. G.T. பெஞ்சமின் மறுபடியும் பேசினார். "என்ன இது? நீங்கள் அவரை சபைக்குப் புறம்பாக்க (Excommunicate) வேண்டும் என்று விரும்புகிறீர்களா? அஃதைச் செய்யுங்கள். அதை எழுதுங்கள், நானும் கையொப்பமிடுகிறேன். நீங்கள் அவரை விரும்பவில்லையென்றால் அவரை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று சொன்னார். "ஆம்" என்று அநேக சத்தங்கள் சொன்னது. "*அவன் போகட்டும், ஊழியத்திலிருந்து அவனை வெளியேற்றுங்கள். அவன் இராஜினாமாச் செய்து விட்டுப் போகட்டும்*" என்றார்கள்.

இந்தச்சமயத்தில் நான் வெளியேறும்படி எழுந்தேன். "என் உடன் சகோதரர்களால் நான் புறக்கணிக்கப்பட்டபின், நான் இங்கே தங்கியிருக்க எனக்குக் காரணம் இல்லை." அப்பொழுது அவர்கள் சொன்னார்கள் :

"கீழே உட்காரு. இப்பொழுது எங்களுக்குப்பதில் சொல். அதன்பின் நீ போகலாம்."

நான் உட்கார மறுத்தேன்.

சேர்மன் அவர்கள் அமைதியாக இருப்பதை நான் பார்த்து விட்டு நான் அந்த புஸ்தகத்தை (ஸ்தல சபை - தேவ ஒழுங்கு) என் கையால் உயர்த்திப்பிடித்துச் (என் அமைதியை முதல் முறையாக உடைத்துக் கொண்டு) சொன்னேன் :

*"நான் தேவ பயத்தோடு இதை எழுதினேன்.
நான் இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தைக்காகவும் நிற்பேன்.
என்னைப் பொறுத்தமட்டில், நான் உங்கள் கையில்
இருக்கிறேன்."*

அப்பொழுது சப்தங்கள் கூக்குரலிட்டன...

"இராஜினாமாச் செய்துவிட்டுப்போ. இராஜினமாச் செய்து விட்டுப்போ."

அவர்கள் எல்லாரும் கையொப்பம் இடுவதற்காக, ஞாபககுறிப்புத் தொகுப்புப் புத்தகத்தில் (Minutes Book) தங்கள் தீர்மானத்தை எழுதும்படி அவர்கள் யாவரும் சகோ. ஜாண் ஸ்டீவர்ட் (Bro. John Stewart) அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

சகோ. ஜாண் ஸ்டீவர்ட் அவர்கள், நடுங்கிக் கொண்டிருக்கிற கரங்களை உயர்த்திச் சொன்னார் :

"நான் இவைகளை என் கையால் எழுதமாட்டேன்". உடனே அவர்களில் ஒருவர் அவரை எதிர்கேள்வி கேட்டு, "ஏன் எழுதமாட்டாய்? இதுவரைக்கும் நீ எங்கள் பக்கம் இருக்கவில்லையா? எழுது" என்றார்.

பதினோருபேர் அடங்கிய இந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்தத் தீர்மானத்தை எழுதும்படி இருந்தார்கள்.

இங்கே, முப்பது வருஷங்களாக நான் ஊழியம் செய்த ஐக்கியத்திலிருந்து ஒதுக்கப்பட்டவனாக, 'சபைகளில் பிரிவினை உண்டுபண்ணுகிறவன்,' 'தவறான உபதேவங்களைப் போதிக் கிறவன்,' என்று புறக்கணிக்கப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டவனாக நான் இங்கே நின்றேன்! 'டிரஸ்டீஸ்' என்பவர்களுக்கு என்னிடத்தில் விளக்கம் கேட்க விருப்பம் இல்லை. அந்தக் கூட்டமோ கொடுங்கோபத்திலிருந்தது!

பரிசுத்த வேதாகமம் சொன்னதை நான் உறுதிப் படுத்தினதற்காகவே இவையெல்லாம் சம்பவித்தன!

சகோ. பக்த்சிங் அவர்களையும், அவர்கள் (ஸ்தல சபை விசயமாய்) எழுதினவைகளையும் நான் மேற்கோள் காட்டினதற்காக இவையெல்லாம் நடந்தது. எல்லா

விசுவாசிகளும் 'தேவனுடைய ஆசாரியர்கள்' 'தேவ ஊழியர்கள்' என்று நான் உறுதிபடக்கூறினதினிமித்தம் இவை எல்லாம் நேர்ந்தது!

ஒவ்வொரு சபையும் ஒரு ஸ்தல சபை என்றும், தலைமை சபை (Head Quarters Church) *என்று ஒன்று இல்லை என்று நான் போராடினதினிமித்தமே இவையெல்லாம் எனக்கு வந்தது! (கலா. 5:11)*

இன்றைக்கு நான் சபையிலிருந்த விலக்கி (தள்ளி) வைக்கப்பட்டுள்ளேன் (Excommunicated).

"சபையிலிருந்து அவனை விலக்கி வையுங்கள்!"

"நம்முடைய ஐக்கியத்தை விட்டு அவன் வெளியே போகட்டும்!

"எல்லா ஊழியங்களிலிருந்தும் அவனை ஒதுக்கி வையுங்கள்!" இந்த வார்த்தைகள் தொடர்ந்து என் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. இதற்கு மேலும் நான் ஏன் அங்கே நிற்க வேண்டும்?

மறுபடியும், (பழைய ஏற்பாட்டு முறையாகிய) 'ஆசாரியர்' (லேவியர்) ஊழிய முறையை (Priestly order) *சபைக்குள் கொண்டுவரத் தீர்மானித்து விட்ட மூத்த சகோதரர்களுக்கு நான் ஏன் இடையூராக இருக்க வேண்டும்?*

அந்த சப்தங்கள் கேட்டுக் கொண்டன :

"இராஜினாமா செய்துவிட்டு போ! இராஜினாமா செய்"

இப்பொழுது இரண்டாவது முறையாக நான் என் வாயைத் திறந்து சொன்னேன்;

"நீங்கள் யாரும் என்னை ஊழியத்திற்கு ஏற்படுத்த வில்லை, தேவனே எனக்கு இந்த ஊழியத்தைக் கொடுத்தார். நீங்கள் என்னை விரும்பவில்லையென்றால் நான் போகிறேன்!"

"உடைபட்ட உள்ளத்தோடு, கண்ணீரைத்துடைத்துக் கொண்டு நான் வெளியேறினேன்."

“நம்முடைய எல்லாச் சபைகளிலும் அவன் ஊழியம் செய்யாதபடி அவனைத் தடைசெய்யுங்கள்!”

“நம்முடைய சபைகளில்”! கிறிஸ்துவின் தலைமைத்துவம், கர்த்தத்துவம் மறுக்கப்படுகிறது. அவருடைய வசனமும், அவருடைய நடைமுறைச் செயல்களும் புறக்கணிக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டு, தப்பர்த்தப்படுத்தப்பட்டது. ***நான் வெளியே அனுப்பப்பட்டேன்.***

செப்டம்பர் 5, 2006 முதல் இந்நாள் வரைக்கும், அதாவது அக்கோடார் 14, 2006 வரை நான் கர்த்தரோடு அமைதியாகக் காத்திருந்து ஜெபித்து, அடுத்த அடி எடுத்துவைப்பதற்காகக் கர்த்தருடைய வழி நடத்துதலைத் தேடிக்கொண்டிருந்தேன். இந்த நாற்பது நாட்களும், என்னுடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும் நாட்களாகவும், ஜெபத்தில் கெஞ்சி மன்றாடும் நாட்களாகவும் எனக்கு அமைந்தன. தேவன் எங்களோடு பேசிக் கொண்டும், எங்களை உற்சாகப்படுத்திக் கொண்டுமிருந்தார். வெளியே அனுப்பப்பட்டது நான் மட்டுமல்ல, ***ஆனால் என் முழு குடும்பமே வெளியே அனுப்பப்பட்டது.*** இந்தப் பட்டணத்திலே நாங்கள் ஊழியம் செய்வதற்காக விரும்பி அழைக்கப்பட்டோம் (திருவனந்தபுரத்திலிருந்து). அப்படி எங்களை அழைத்தவர்களே இப்பொழுது கதவை அடைத்து விட்டார்கள்!

என்னுடைய உபதேசங்கள் தவறானவைகளாக இருந்திருந் தால், என்னை ஏன் அவர்கள் தடுத்து நிறுத்தவில்லை? சேர்மன் (தலைவர்) அவர்கள் ஏன் என்னைப்பார்த்து, “நீ போதித்துக் கொண்டிருக்கும், ‘வேதாகம விளக்க உரைகளும்,’ விரிவான விளக்கங்களும்’ தொடர்ந்து நடக்கட்டும் என்று ஏன் என்னை உற்சாகப்படுத்தினார்?” (பக்கம் 6). இதை விளங்கிக் கொள்ள முடியாமல் திகைக்கின்றேன்!

ஞாயிற்றுக் கிழமைகளில், நாங்கள் கப்பீஸ் பேட்டையிலுள்ள (EL - BETHEL, HAFEEZPET) ஏல்-பெத்தேலில் கூடிவரும் பரிசுத்தவான்களோடு கர்த்தரை ஆராதித்திதோம். விருப்பமிருப்பின் சகோ. சுந்தரராவ் (+91-40-65340899) அவர்களிடம் விசாரித்து அறிந்துகொள்ளலாம். இந்த நாற்பது நாட்களிலும், நான் எங்கும் பிரசங்கித்ததில்லை.

ஒரு பிரிவினையை உண்டாக்கி, என்னைப்பின்பற்றி வரக்கூடிய ஒரு கூட்டத்தை உருவாக்க எண்ணி, தேவனுடைய

வசனத்தின் உண்மைகளை நான் பிரசங்கிக்கவில்லை. பழைய கடந்த கால சந்ததியினர் சகோ. பக்த்சிங் அவர்களுடைய வல்லமையான ஊழியத்தில் கண்ட ***உயிர்மீட்சிகள்*** மறுபடியும் திரும்பவேண்டும் என்று மிகுந்த ஆவலோடு நம்பினேன். என்னுடைய கனவுகளெல்லாம் தவிடு பொடியாகிவிட்டன. (தூள் தூளாக நொறுங்கிப் போய்விட்டன).

சில நாட்களுக்குள், செப்டம்பர் 17, 2006 எபிரோன் மெசஞ்சர், பத்திரிகையை நான் பெற்றபோது அதிர்ச்சிக் குள்ளானேன். (என்னை) 'நீதி விசாரனை செய்த குழுவினர்' (Jury) தீர்ப்பு, (முடிவு) அதிலே முழு உலகத்திற்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அது இவ்விதமாக எழுதப்பட்டிருக்கிறது:

"ஸ்தல சபையின் செயல்பாடும் அதின் தலைவர்களின் அமைப்பும் பற்றி, சகோ. பால்சுதாகர், எங்களுடைய இணைந்த ஆலோசனையைத் தேடாமல், பேசியும், எழுதியுமுள்ள சமநிலையற்ற விளக்கத்தைப்பற்றி (Imbalanced Exposition) நீங்கள் தெரிந்திருப்பீர்கள். தேவனுடைய கனம் பொருந்திய ஊழியரான காலம் சென்ற சகோ. பக்த்சிங் அவர்களும், அவருடைய உடன் ஊழியர்களும், சென்னையிலுள்ள யேகோவா-ஷம்மாவில் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாகவும், ஹைதராபாத் திலுள்ள 'எபிரோனில்' ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாகவும் தியாகமாய் ஊழியம் செய்து, இந்த நாட்டிலே மீட்கப்பட்டவர்கள் மத்தியிலே ஸ்தாபித்த சாட்சியின் தரிசனத்திற்கும், ஊழியத்திற்கும், வேதபோதனைக்கும் மாறாக, அவர் (பால்சுதாகர்) தெரியப்படுத்தியுள்ள காரியங்கள் அநேக இடங்களில் அமைந்துள்து. நாங்கள் ஜெபித்து, சகோ. பால் சுதாகரோடு விவாதிக்கக் கூடினபோது, அவர் (பால் சுதாகர்) தனது போதனைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள (withdraw) விரும்பவில்லை. இப்போதனைகள் இந்தியாவிலும், இந்தியாவைத் தாண்டியுள்ள இடங்களிலுமுள்ள சாட்சிகளின் வளர்ச்சிக்கும், பராமரிப்புக்கும் நஷ்டத்தை விளைவிக்கக்கூடும் என்று நாங்கள் முன்னறிந்தோம். எனவே நாங்கள் நம்முடைய சபைகளிலே அவருடைய (பால்சுதாகர்) ஊழியத்தைச் சிலகாலம் கட்டுப்படுத்த கர்த்தரால் கட்டாயப்படுத்தப்பட்டோம். அவர் தன்னைத் திருத்திக்கொள்வதற்காக, நாங்கள் பணிவோடும், ஜெபத்தோடும் இப்படிச் செய்தோம்."

(பெரிய எழுத்துப் பகுதிகளை நான் ஏற்படுத்தினேன்.)

"நம்முடைய சபைகள்!" சகோ பக்த்சிங் அவர்களுடைய ஊழியத்தோடு இணைக்கப்பட்டுள்ள எல்லா சபைகளிலும் கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன. *வேத வசனத்தின்படி ஸ்தல சபைதான் ஒரு அங்கத்தினரை சபையிலிருந்து தள்ளிவைக்க (ஒதுக்கிவைக்க) வேண்டும்! ஸ்தல சபையிலிருந்து ஒரு நபர் கூட எனக்காகப் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை!. இந்தத் தீர்ப்பை வழங்குவதற்கு, மற்ற சபைகளிலிருந்து தனிநபர்கள் ஒரு குழுவாக அழைக்கப்பட்டார்கள். (எபிரோன் மெசஞ்சர், செப்டம்பர் 17,2006ல் என்னை ஊழியத்திலிருந்து சிலகாலம் ஒதுக்கிவைப்பதாக பிரசுரிக்கப்பட்ட இந்த பிரசுரிப்புக்கூட, பத்திரிக்கையை அச்சிடுபவரும், வெளியிடுபவருமான சகோ. G.T. பெஞ்சமின் அவர்களுக்குக் கூட தெரியாமல் வெளியிடப்பட்டுள்ள என்பதைப் பின்னர்தான் நான் அறிந்து கொண்டேன்.*

இரண்டு நாட்கள் 'விசேஷித்தக் கூட்டங்கள்' ஏற்பாடு செய்து (செப்டம்பர் 21, 22-2006), 300 பேருக்கும் அதிகமான முழுநேர ஊழியர்களை அதில் அழைத்து, அதிலே பால்சுதாகருடைய 'நன்மை தீமை கொள்கைகள்' (More!) 'உபதேசத்தவறுகள்' (doctrinal failures) இவைகளை அவர்களுக்கு '*கற்றுக் கொடுக்க* ஏற்பாடு செய்ததாக, சில நாட்களுக்குப் பிறகு நான் அறிந்தேன்!

என்னுடைய புத்திக்கு எட்டினமட்டில், கடந்த இருபது ஆண்டுகாலங்களில், ஜெபத்திற்காக இத்தனை முழுநேர ஊழியர்கள் ஒருபோதும் கூடியதே கிடையாது! ஒரு 'சிறு' சகோதரனுடைய (பால்சுதாகர்) வேதாகமப் போதனைகள் அவர்களுடைய காதுகளைப்பாதித்தபடியால், அந்தச் சகோதரனின் நற்பெயரைக் களங்கப்படுத்தி அவரை வெட்கப்படுத்தவேண்டும் என்பதற்காக இது திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட செயல். இந்தத் திட்டமிட்டப் படை முயற்சியானது (கூடுகையானது) நான் இந்தச் சபைகளில் இனி ஒருபோதும் 'ஊழியம்' செய்யக்கூடாது என்பதை இரட்டிப்பாய் உறுதிசெய்தது! *அநேக 'பொய்கள்' பரப்பப்பட்டன. (அதாவது) 'ஒருவரும் அவரைச் சபையிலிருந்து ஒதுக்கி வைக்கவில்லை! பேச்சுவார்த்தை முடியுமுன்பாகவே அவர் உடனடியாக வெளியே போய் விட்டார்', 'நாங்கள் யாரும் அவரை வெளியே அனுப்பவில்லை. அவர்தான் எங்களை விட்டுப் போய்விட்டார்."*

இவர்கள் பேசின பொய்களைப்பார்த்து நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன். 'எபிரோன் மெசஞ்சர்' (செப்டம்பர் 17, 2006) இவ்விதமாக எழுதப்பட்டுள்ளது :

"நாங்கள் ஜெபித்து, சகோ. பால்சுதாகரோடு விவாதிக்கும்படி கூடினோம்."

ஜெபித்தீர்களா? எப்பொழுது? எங்கே? எவ்வளவு பெரிய பொய்!

'எபிரோனிலும்' அதைச் சார்ந்துள்ள சபைகளிலுமுள்ள மாசற்ற ("சூதுவாது" அறியாத) அருமையான விசுவாசிகள், சத்தியத்தைக் (உண்மையைக்) காணும்படி தங்கள் கண்களைத் திறந்து கொண்டார்கள் என்பது என்னுடைய மகிழ்ச்சியான நம்பிக்கையாயிருக்கிறது.

கிறிஸ்து தமது சபையின் 'தலையாக' இருக்கும்படி, அவருடைய ஸ்தானத்தை அவருக்குத் திரும்பக் கொடுப்பதற்காக, புதிய ஏற்பாட்டின் தெய்வீக ஒழுங்கு நிலைநாட்டப்படுவதாக. தேவனுடைய பெரிய மனிதனாகிய சகோ. பக்த்சிங் அவர்களுடைய வாஞ்சை இந்தச் சபைகளில் நிறைவேற்றப்படுவதாக. தேவனுடைய வசனம் கனம்பண்ணப் பட்டு, தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படிவார்களாக! நான் சபையிலிருந்து ஒதுக்கப்பட்டவனாயிருக்கிறேன். எப்பொழுது தேவனுடைய வசனம் இந்தச்சபைகளில் நடைமுறைப் படுத்தப்படுகிறதோ (செயல்படுத்தப்படுகிறதோ), அப்பொழுது தான் என்னுடைய செயல்முறை உறவு இந்தச் சபைகளோடு ஏற்பட வாய்ப்பு உண்டு!

கடந்த முப்பது வருடகாலமாக நாங்கள் ஊழியம் செய்யும்படி எங்களை அனுமதித்த அத்தனை சபைகளுக்கும் நாங்கள் குடும்பமாக நன்றி சொல்ல விரும்புகிறோம். நாங்கள் உங்களுக்கு நன்மையுண்டாக நாடி, உங்களுக்குாக ஜெபிக்கிறோம். நாம் அனைவரும் இந்த இலக்கை நோக்கி நடத்தப்படுவோமாக.

நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், ஒரே சபையாக இணைக்கப்பட்ட வாழ்க்கையிலும், ***கிறிஸ்துவுக்கு*** உரிய நியாயமான ஸ்தானமாகிய தலைமை ஸ்தானத்தை அவருக்கு மறுபடியும் கொடுத்து, தேவனுடைய மகிமைக்காகவும், சகல பரிசுத்தவான்களின் பக்தி விருத்திக்காகவும் அவருடைய

வசனத்திற்கு முதன்மை ஸ்தானம் (முக்கியத்துவம்) கொடுப்பதற்காக, தேவனுடைய ஆவியானவர் விரும்புகிறபடி நம்மை நடத்துவாராக. நான் மறுபடியும் சொல்லுகிறேன், என்னைப்பற்றிச் சொல்லப்படுகிற பொய்களுக்கும், வதந்திகளுக்கும் பதில் சொல்வதற்காகவே முக்கியமாக இந்த சம்பவங்களையெல்லாம் தெரியப்படுத்துகிறேன்.

யாரையாவது களங்கப்படுத்துவதற்காக நான் இதை எழுதவில்லை. நாற்பது நாட்களாக நான் கர்த்தரோடு தனித்திருந்து ஜெபித்த பின்னர், இந்த உண்மைகளை எல்லாருக்கும் முன்பாக வைப்பதற்கு தேவன் என்னைத் தூண்டினார்.

என்னை மோசமாக நடத்தின என்னுடைய சகோதரர்களை நான் மன்னித்து விட்டேன்.

கர்த்தருடைய வசனமே ஜெயங்கொள்வதாக!

கல்வாரியினிமித்தம்,
உங்களுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கும்,
உங்களுடைய
சகோ. பால்சுதாகர்
தேவ ஊழியர்

அக்டோபர், 2006
ஐதராபாத் 500032

மொழிபெயர்ப்பாளர் இணைப்புகள்

'வெப்சைட்டில்' (Website) *வெளியான செய்திகளில் சில*
இணைப்பு - 1

WHY I LEFT 'HEBRON' LOCAL CHURCH?

BRO. B. SAMUEL, Deacon, Hebron Church, Hyderabad

நான் ஏன் "எபிரோன்" ஸ்தல சபையை விட்டு வெளியேறினேன்?

சகோ. B. சாமுவேல், உதவிக்காரர், எபிரோன் சபை ஐதராபாத்

இது, சகோ. பக்த்சிங் அவர்கள் தங்களுடைய பரலோக வீட்டிற்குச் சென்றபிறகு, அவருடைய ஊழியத்தின் சரித்திரத்திலே ஏற்பட்ட தவறான முன்னேற்றம் (அல்லது எதிர்விதமான அபிவிருத்தி) பற்றிய ஒரு எழுத்து விளக்கம் ஆகும்.

இந்த ஊழியம், ஐதரபாத்திலே, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே நான் இந்த ஊழியத்தில் இணைந்து ஆர்வத்தோடு ஊழியம் செய்துவந்தேன். ஐதராபாத்தி லுள்ள 'எபிரோன்' ஸ்தல சபையிலே, சகோ. பக்த்சிங் அவர்களால் அபிஷேகம் பண்ணப்பட்டு, ஏற்படுத்தப்பட்ட உதவிக்காரர்களில் நானும் ஒருவன்.

பாரம் நிறைந்த ஒரு இருதயத்தோடு இதை எழுத நான் கட்டாயப்படுத்தப்படுகிறேன்.

சகோ. பக்த்சிங் அவர்கள் ஸ்தல சபைகளின் செயல்பட்டை, வேதாகம கொள்கைகளின் அடிப்படையில் முக்கியப்படுத்திப் போதித்து வந்தார்கள். அதன்படியே, ஐதரபாத்திலுள்ள எபிரோன் சபைக்குச் சில மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் ஏற்படுத்தி வைத்தார்கள். ***ஆனால் இந்த தெய்வீக ஒழுங்கை தீய சக்திகள் கடுமையாகத் தாக்கி, ஸ்தல சபைகளின் அமைப்பயையும், அதன் செயல்பாடுகளையும் நாசப்படுத்தி வந்தன.***

எபிரோனிலே சகோ. பக்த்சிங் அவர்களால் அபிஷேகம் பண்ணப்பட்டு ஏற்படுத்தப்பட்ட மூப்பர்களில் சகோ. G.T. பெஞ்சமின் ஒருவர் மட்டும்தான் இப்பொழுது இருக்கிறார். சகோ. பக்த்சிங் அவர்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சகோதரர்களில் ஒருவராகிய சகோ. K. பிலிப் அவர்கள் (சமீபத்தில்) 'எபிரோன்' ஸ்தல சபைக்கு மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் ஏற்படுத்துவதற்காக, சில சகோதரர்கள் பெயர்களைத் தேர்வு செய்து, அதைச் சபைக்கு அறிவிக்குமாறு சகோ. G.T. பெஞ்சமின் அவர்களை அங்கீகரித்தார். அதன்படி, சகோ. பெஞ்சமின் அவர்கள் சில முக்கியமான சகோதர்களின் பெயர்களை மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் எபிரோனிலே ஏற்படுத்துவதற்காக தெரிந்தெடுத்து, சபையிலே அதை முன்மொழிந்தார். ***அதை சகோ. K. பிலிப் அவர்கள் ஒரு கூட்டத்திலே, டிரஸ்டீஸ் முன்பாக சரி என்று ஒத்துகொண்டார். அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன். அவர் சகோ. G.T. பெஞ்சமின் அவர்களை அங்கீகரித்தார் என்பது எனக்கும் தெரியும்.***

அடுத்து செய்யப்பட வேண்டிய வேலையானது, அவர்களை மூப்பர்களாக, உதவிக்காரர்களாக அபிஷேகித்து ஏற்படுத்துவதுதான்.

ஆனால், *இந்த கடைசிவேலையாகிய 'ஏற்படுத்தும்' வேலைக்கு மாறாக, இதுவரை பிரயாசப்பட்டுச் செய்து வைத்திருந்த அத்தனை காரியங்களையும் சகோ. K. பிலிப், தியோடர் ரெஜினால்டு, மற்றும் அவர்களைச் சேர்ந்த மற்றவர்கள் சேர்ந்து, பயனுற்றுப்போகச் செய்து விட்டார்கள் (கெடுத்து விட்டார்கள்).* அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் என்னவென்றால், அவர்கள் சொன்ன சிலருடைய பெயர்கள் இதிலே இடம்பெற வில்லையாம். இந்த அறிக்கையானது, 'வெப்சைட்'டிலே சகோ. கோஷி அவர்கள் தெரிவித்த தனது கடிதத்தில், 5வது பகுதியில் (Para) 5 வது வரியில் "சிலர்" (சிலமக்கள்) (Some folks) என்று தெரிவித்த வாசகம் இந்த அறிக்கையை உறுதிப் படுத்துகிறது. *மேலே சொன்ன தெய்வீக ஒழுங்கை ஏற்றுக்கொள்ள விருப்பமற்று, பதவி ஆசை மட்டுமே கொண்டிருந்த அங்குள்ளவர்கள், இதுவரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தக் காரியங்களையும் உடைத்துத் தூளாக்குவதையே விரும்பினார்கள்.* இப்படிப்பட்டவர்கள்தான் இந்த ஸ்தல சபைகளின் ஒழுங்கு முறைகளை உடைத்தெரிய சதுரங்கப்பகடைக்காய்களாய் அங்கே உபயோகிக்கப்பட்டார்கள். *அன்று மூப்பர்கள், உதவிக்காரர்கள் ஏற்படுத்தும் அந்த நடைமுறையை மொத்தத்தில், இவர்கள் எல்லாரும் சேர்ந்து, தட்டிக் கெடுத்து விட்டார்கள்.*

இந்தக் காலகட்டத்தில்தான், சகோ. பால் சுதாகர் அவர்கள், வேத வசனத்தின்படியும், சகோ. பக்த்சிங் அவர்கள் போதித்து வந்தபடியும், ஸ்தல சபைகளின் செயல்பாடுகளைப் பற்றிய தெய்வீகக் கொள்கைளை 'எபிரோனிலும்' மற்ற ஸ்தல சபைகளிலும் போதித்து வந்தார். முக்கியமான ஸ்தானங்களில், பொருப்புகளில் இருந்த சிலர், சகோ. பால் சுதாகர் அவர்கள் தெளிவாய்ப் பேசின இந்த சத்தியங்களைக் குறித்து பொறாமை கொண்டு, வேத வசனத்தின் மாதிரியின்படியான, ஸ்தல சபையின் சத்தியங்களை அழிப்பதற்கு முழு நோக்கங் கொண்டிருந்தார்கள்.

சகோ. பால்சுதாகர் அவர்களை, ஆதாரமில்லாத குற்றச்சாட்டு களால் குற்றப்படுத்த வேண்டும் என்ற சூதான (வஞ்சகமான) எண்ணத்தோடு, சகோ. K. பிலிப் அவர்களும், மற்றும் சிலரும், எபிரோனிலே செப்டம்பர் 5ம் தேதி, 2006ல் ஒரு கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்கள். *எபிரோனிலே மூப்பர்கள்,*

உதவிக்காரர்கள் ஏற்படுத்தும் வேலையானது முடிவுபெறும் நிலையில் இருக்கும்போது, அதைச் செய்யாமல், சகோ. K. பிலிப் அவர்கள் தன்னுடைய வழக்கத்தின் படியே, ஏமாற்று வித்தை செய்து, மூப்பர்கள், உதவிக்காரர்களை ஏற்படுத்தும் இந்த முக்கியமான வேலையைத் திசை திருப்பி விட்டார்கள்.

நான் மேலே குறிப்பிட்ட அந்த செப்டம்பர் 5ம் தேதி, 2006 கூட்டத்தில், சகோ. , பால்சுதாகர் அவர்கள் 'டிரஸ்ட்' அங்கத்தினர்களைப் பார்த்து, தான் எழுதின அந்த ஸ்தல சபை செயல்பாடு சம்பந்தமான புஸ்தகத்தில், அவர்கள் ஏதாவது தவறான உபதேசங்களைக் (Erroneous Doctrine) கண்டு பிடித்தது உண்டா? என்று கேட்டார். அந்தக் கேள்விக்கு, 'டிரஸ்டீஸ்' ஒருவர் கூட ஒரு மறுப்பும் சொல்லவில்லை. ஆனால் திடீரென்று, அரசியல் கட்சிக்காரர்கள் சுமார் நாற்பதுபேரும், ஆவிக்குரிய கட்சிகாரர்களும் சேர்ந்து, பெருங்கூச்சல் குழப்பத்தோடு, கோபாவேசமாக அந்த அறைக்குள் புகுந்து, சகோ. பால்சுதாகர் அவர்களைக் கடுமையாகத் திட்டிக் கூச்சலிட்டார்கள். இப்படிப்பட்ட வன்முறையான கூட்டம்தான், அன்று அங்கு நடந்த செயல்களையும் பொறுப்பேற்று நடத்தினது. தலைவர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்டவர்களெல்லாம் தாங்கள் திட்டமிட்டபடியே ஊமையாகவே இருந்தார்கள். சகோ. பால் சுதாகர் அவர்கள் அதிகமாகச் சத்தியத்தை அறிவித்து விடாதபடிக்கு, அவரை ஊழியத்தை விட்டு விலக்குவதற்காக தீர்மானம் நிறைவேற்றுவதில் இந்த கூட்டத்தினர் மிகவும் துடிப்பாக ஈடுபட்டார்கள். சகோ. பால்சுதாகர் மேல் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு ஸ்தல சபைகள் பற்றி அவர் எழுதின புஸ்தகத்தை 'வாபஸ்' பண்ண வேண்டும் என்று சகோ. K. பிலிப் அவர்கள், 'எபிரோன் மெசஞ்சர்' பத்திரிகப்கையின் பதிப்பாசிரியரானபடியால், அவசர அவசரமாக இந்தத்தீர்மானத்தைப் பத்திரிக்கையில் வெளியிட்டார்.

அந்த புஸ்தக்கத்திலே ('ஸ்தல சபை தெய்வீக ஒழுங்கு') அவர்கள் எந்த ஒரு தவறும் கண்டு பிடிக்காதிருக்கையில், வாபஸ்பெறப்பட வேண்டியது எது? (What is to be withdeawn?) என்று பகுத்தறிவுள்ளவர்கள் (சிந்திக்கக் கூடியவர்கள்) சிந்திக்கத்தான் செய்வார்கள்!

மேலும், அந்த புஸ்தகத்தை (செய்தியை) முதலில் அச்சிட்டு அல்லது கணணியில் (Computer) போட்டு, சுற்றறிக்கை விட்டது (Circulation) சகோ.பால்சுதாகர் அல்ல! இந்த மேலான உண்மையை (சத்தியத்தை) முழு உலகமும் அறிய வேண்டும் என்று வாஞ்சையுள்ள (ஆர்வமுள்ள) மற்றவர்கள்தான் அப்படிச் செய்தார்கள்.

சகோ. பால்சுதாகர் மீது வீண்பழி சுமத்துவதற்காக, 'எபிரோன் மெசஞ்சர்' பத்திரிகையில் வெளியிட்ட செய்தியையும், அதேபோல், 'ஸ்தல சபை' பற்றி வெளியிடப்பட்ட செய்தியில் ***தவறு இருந்து, அது சுட்டிக்காட்டப்படுமானால், இரண்டையுமே வாபஸ் பெறவேண்டும்.***

இன்னும் அநேக நாசமுண்டாக்கும் (பாழாக்கும்) காரியங்கள் வெளிவர இருக்கிறது. மேலும், செப்டம்பர் 5-2006ல் நடந்த கூட்டத்திற்குப் பிறகு, சகோ. K. பிலிப் அவர்களால், எபிரோனிலே ஒரு கூட்டம் செப்டம்பர் 21, 2006லே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது சகோ. பால் சுதாகர் அவர்கள் எழுதின புஸ்தக சம்பந்தமாகப் பேசுவதற்காக கூட்டப்பட்டது. அதிலே நானும் அன்று அங்கு இருந்தேன். (சகோ. B. சாமுவேல்). அடியிற்கண்ட முக்கியமான சகோதரர்கள் (Stalwart) அன்று அங்கேயிருந்தார்கள்.

1. சகோ. K. பிலிப் - சென்னை
2. சகோ. தியோடர் ரெஜினால்டு - சென்னை
3. சகோ. எடி வில்லியம்ஸ் - சென்னை
4. சகோ. குருவில்லா - கோயம்புத்தூர்
5. சகோ. அம்புரூஸ் -
6. சகோ. குரியன் - கடப்பா
7. ஜாண் சுப்பா ரெட்டி - ஓங்கோல்
8. சாம்சன் - புரோடுடூர்
9. ஆண்ட்ரூஸ் - சங்காரெட்டி
10. J.C. ராவ் - டில்லி
11. தீமோத்தேயு - தெனாலி
12. காலேப் - வேலூர்

இவர்கள் யாவரும் முழுநேர ஊழியர்கள்

13. F.C.S. பீட்டர், ஹைதராபாத், மற்றும் அநேகர்.

'எபிரோனிலே', இன்று பெருவழக்கமாய் பரவிக் கொண்டிருக்கிற அந்த பயங்கரமான பாவம், பிரசித்தி பெற்ற

அங்கத்தினர்களாயிருக்கிற ("The Elite members") இவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அது எப்படிப்பட்ட பாவம் என்பதும் அந்தக் கூட்டத்திலே விளக்கமாய்ச் சொல்லப்பட்டது. அந்தப்பாவத்தை இங்கே, இந்த சுருக்கமான விளக்கத்திலே, எழுதக்கூடாது. ஆனால் துக்ககரமான காரியம் என்னவென்றால், அங்கே, அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவராவது அந்தப்பாவத்தைக் கண்டிக்கவோ, அல்லது அதைக்குறித்து வெறுப்புத் தெரிவிக்க வோ இல்லை. ஆனால் அதற்கு மாறாக, 'சவப்பெட்டிக்கு அடிக்கும் கடைசி ஆணியைப் போல்' அந்தப் பாவத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற நபர்கள் தான், இங்கு எல்லாவற்றையும் இயக்கும் 'இயக்க மையமாக' (are holding pivotal position) பதவி வகிக்கிறார்கள். இவ்விதமாக ஊழியத்தின் முக்கிய நீரோட்டத்தை அசுசிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நான் மற்றவர்களோடும் இது விசயமாய்ப் பேசி, முயற்சி செய்து பார்த்தேன். இந்த ஒழுங்கீனங்களையெல்லாம் சரி செய்து, சபை ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கொண்டு வரும்படி சகோ. K. பிலிப் அவர்களிடம் பேசிப்பார்த்தேன். ஆனால் இவையெல்லாம் வீணான பிரயாசமும், 'வனாந்திரத்தில் கூப்பிடுகிறவனின் சத்தமும்போல்' ஆகி, எபிரோனிலே நிலைமை திருத்த முடியாத அளவிற்கு சீர்கெட்டுவிட்டது. எனவேதான் இப்படிப்பட்ட இழிவான, வெறுக்கத் தக்கச் செயல்களை கண்டித்து, மறுப்புத்தெரிவித்து, (as a protest to such vilest practices) 'எபிரோனை' விட்டு வெளியேறத் தீர்மானித்தேன்.

தேவ ஊழியத்தில்
சகோ. B. S. **சாமுவேல்**
உதவிக்காரர், எபிரோன் சபை, ஐதரபாத்

இணைப்பு - 2
FEELINGS / FACTS
உணர்வுகள் / உண்மைகள்

நாங்கள் சகோ. கோஷி அவர்களுடைய கடிதங்களை அவருடைய (website) 'வெப்சைட்டிலும்', சகோ. K. பிலிப் அவர்களுடைய கடிதங்களை செப்டம்பர் 17, 2006 'எபிரோன் மெஷஞ்சர்' பத்திரிகையிலும் வாசித்தபோது, ***இந்த இரண்டுமே எப்படி ஒன்றுக்கொன்று முரண்பாடாயுள்ளது என்பதை அறிந்தவர்களாய்,***

சகோ. பால்சுதாகர் அவர்களைப் பற்றிய சில (Hard Facts) கடினமான உண்மைகளைத் தாழ்மையுடன் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நாங்கள் விரும்புகிறோம்.

'எபிரோன் மெசஞ்சரில்' சகோ. K. பிலிப் அவர்கள் எழுதின கடிதத்தின் தொகுப்பு :

"*ஸ்தல சபையின் செயல்பாடும் அதின் தலைவர்களின் அமைப்பும் பற்றி*, சகோ.பால்சுதாகர், எங்களுடைய இணைந்த ஆலோசனையைத் தேடாமல், ***பேசியும், எழுதியுமுள்ள சமநிலையற்ற விளக்கத்தைப்பற்றி*** (Imbalanced Exposition) நீங்கள் தெரிந்திருப்பீர்கள்! தேவனுடைய கனம் பொருந்திய ஊழியரான ***காலம் சென்ற சகோ. பக்த்சிங் அவர்களும், அவருடைய உடன் ஊழியர்களும்,*** சென்னையிலுள்ள யேகோவா-ஷம்மாவில் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாகவும், ஹைதராபாத்திலுள்ள 'எபிரோனில்' ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாகவும் தியாகமாய் ஊழியம் செய்து, இந்த நாட்டிலே மீட்கப்பட்டவர்கள் மத்தியிலே ஸ்தாபித்த சாட்சியின் தரிசனத்திற்கும், ஊழியத்திற்கும், வேதபோதனைக்கும் மாறாக, அவர் (பால்சுதாகர்) தெரியப்படுத்தியுள்ள காரியங்கள் அநேக இடங்களில் அமைந்துள்ளது. ***நாங்கள் ஜெபித்து, சகோ. பால் சுதாகரோடு விவாதிக்கக் கூடினபோது,*** அவர் (பால்சுதாகர்) தனது போதனைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள (withdraw) விரும்பவில்லை. இப்போதனைகள் இந்தியாவிலும், இந்தியாவைத் தாண்டியுள்ள இடங்களிலுமுள்ள ***சாட்சிகளின் வளர்ச்சிக்கும், பராமரிப்புக்கும் நஷ்டத்தை விளைவிக்கக் கூடும் என்று நாங்கள் முன்னறிந்தோம். எனவே நாங்கள் நம்முடைய சபைகளிலே அவருடைய (பால்சுதாகர்) ஊழியத்தைச் சிலகாலம் கட்டுப்படுத்தக் கர்த்தரால் கட்டாயப்படுத்தப் பட்டோம். அவர் தன்னைத் திருத்திக் கொள்வதற்காக,*** நாங்கள் பணிவோடும், ஜெபத்தோடும் இப்படிச் செய்தோம்."

'வெப்சைட்டிலே', ***சகோ. கோஷி*** அவர்கள் எழுதின கடிதத்தின் தொகுப்பு:

"சகோ. பால்சுதாகர் அவர்கள் எழுதின "ஸ்தல (உள்ளூர்) சபை - தெய்வீக ஒழுங்கு" என்ற கட்டுரையில் அநேக, அடிப்படைக் காரியங்களைப் பகர்ந்திருக்கிறார். அதில், உள்ளூர் சபைகளில, மூப்பர்கள், உதவிக்காரர்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற காரியமும் அடங்கியிருக்கிறது". இங்கேயிருக்கிற முக்கியமான காரியமானது, ***நாங்கள்*** மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களை ஏற்படுத்துவதல்ல.

எல்லாருமே, மூப்பர்கள், உதவிக்காரர்கள் ஏற்படுத்தப்பட வேண்டும், என்ற கருத்திற்கு ஆதரவாகவே இருக்கிறோம்.

ஆனால் இந்தக்காரியத்தில், ஸ்தல சபைகளில் தேவ ஊழியர்களின் உறவு முறை, மற்றும் ஏனைய கொள்கை, மற்றும் நிர்வாகக் காரியங்கள் இவைகளில் சகோ. பக்த்சிங் அவர்கள் தாமே தெளிவாக நடைமுறைப்படுத்திய காரியங்கள் ஆகியவற்றையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ***ஆனால் மிகமுக்கியமான காரியம் (குற்றச்சாட்டு) என்னவென்றால், சகோ. பால் சுதாகர், தான் எழுதிய கட்டுரையின் கருத்தை மூத்த சகோதரர்களுடன் கலந்து பேசாமல் அதை மற்றவர்கள் அறியும்படி பரப்பி விட்டார் என்பதுதான்."***

இந்த இரண்டு சகோதரர்களின் கடிதங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக (பொருந்தாததாக) இல்லையா? சகோ. K. பிலிப் எழுதுகிறார், "சகோ. பால் சுதாகரின் போதனையானது பரிசுத்த வேதாகமதத்திற்கு எதிராகவும், இந்த சாட்சியின் வளர்ச்சிக்கும், பராமரிப்பிற்கும் கேடுவிளைவிக்கக் கூடியதாயுமிருக்கிறது" என்று. சகோ. கோஷி எழுதுகிறார், ***"அந்தக் கட்டுரையின் கருத்துக்கள் சரியானதுதான், நாங்கள் ஒவ்வொருவரும் அவைகளுக்கு ஆதரவாகவே இருக்கிறோம்.*** ஆனால், சகோ. பால்சுதாகர், அந்தப் போதனைகளை போதிப்பதற்கும், அல்லது அந்தக்கட்டுரையை வெளியே பரப்புவதற்கும் முன்பு, தேவனுடைய மூத்த ஊழியர்களிடத்தில் ஆலோசனை மட்டும் கேட்கவில்லை" என்று.

எபிரோனில் இருக்கிற நாங்கள், செப்டம்பர் 5- 2006 முதல் தொடர்ந்து நடைபெற்று வரும் காரியங்களின் தொடர்ச்சியை, வெகு அருகிலிருந்து, கவனமாகப் பின் தொடர்ந்து கவனித்துவருகிறோம். மூத்த தேவ ஊழியர்கள், செப்டம்பர் 5,2006ல் நிறைவேற்றின தீர்மானத்தை இன்றுவரை சகோ. பால்சுதாகர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவுமில்லை, தெரியப்படுத்தவுமில்லை. அதற்குப் பதிலாக, இந்த மூத்த தேவ ஊழியர்கள் செப்டம்பர் 5, 2006ல் நிறைவேற்றின தீர்மானம் செல்லத்தக்கது என்று செப்டம்பர் 21, 2006ல் ஒப்புதல் கொடுத்தார்கள். பிறகு, அவர்கள் செப்டம்பர் 17,2006 'எபிரோன் மெசஞ்சர்' பத்திரிக்கையில் (சகோ. பால் சுதாகர் அவர்களை ஊழியத்திலிருந்து நீக்கிய விசயத்தை) ***அந்தப்பத்திரிக்கையை வெளியிடுபவரான (Publisher) சகோ. G.T. பெஞ்சமின் அவர்களுக்குக் கூடத்தெரிவிக்காமல், இரகசியமாக அச்சடித்து, உலகமுழுவம் தெரியும்படி பரப்பினார்கள்.***

சகோ. பால்சுதாகரைக் குற்றப்படுத்தி, அவருடைய போதனைகள் பரிசுத்த வேதாகமத்திற்கு எதிராக இருக்கிறது என்று, அன்று சொன்ன இந்த மூத்த ஊழியர்கள், இன்று தங்களுடைய வார்த்தைகளை மாற்றி, "அந்தக் கட்டுரையை, பால் சுதாகர் தைரியமாகப் பரப்பியதுதான் (Bold circulation) தவறு" என்று சொல்லுகிறார்கள்.

NOTE

இப்பொழுது, தேவனுடைய ஊழியர்களான அதே மூத்த சகோதரர்கள், சகோ. G.T. பெஞ்சமின் அவர்களையும் குற்றப்படுத்த ஆரம்பித்து, அவர்களைப் பலிகிடா ஆக்கி விட்டார்கள். இதற்கு தேவனே சாட்சி! ***அன்று, செப்டம்பர் 5, 2006ல் அவர்கள் எடுத்த தீர்மானத்திற்கு, சகோ. G.T. பெஞ்சமின் அவர்களும் கையொப்பமிட (sign) வேண்டுமென்று கேட்டு, கதவுகளைப்பூட்டி, உள்ளே வைத்து அவரை எப்படிக் கட்டாயப்படுத்தினார்கள் என்பதை நாங்கள் பார்த்தோம்.*** அன்று செப்டம்பர் 5, 2006ல் எடுக்கப்பட்ட தீர்மானத்தில், தான் கட்டாயப் படுத்தப்பட்ட தினிமித்தம் போட்ட தனது கையொப்பத்தை சகோ. G.T. பெஞ்சமின் திரும்ப எழுத்தின் மூலம் வாபஸ் பெற்றுக் கொண்டார் (taken back his signature), என்பது உண்மை. செப்டம்பர் 21, 2006 க்குப் பிறகு, தீர்மானத்தின் நகல் ஒன்றில் (Copy of the Resolution) சகோ. K. பிலிப் அவர்கள் மட்டுமே கையொப்பமிட்டு, சகோ. G.T. பெஞ்சமின் அவர்களின் கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டது. அதில் சகோ. G.T. பெஞ்சமின் கையொப்பமிடமால், அதன் அடிப்பாகத்தில், "நான் செப்டம்பர் 5, 2006ல் போட்ட கையொப்பம் செல்லத்தக்கதல்ல என்று ஏற்கனவே எழுத்து மூலம் அறிவித்துவிட்டேன். செப்டம்பர் 21, 2006 தீர்மானத்தையும் நான் ஒத்துக் கொள்ளவில்லை." என்று எழுதி விட்டார். அக்கடிதம் பக்கம் 33ல் உள்ளது.

ஐயோ, இந்நாள்வரை இதிலே வஞ்சகப் புகழ்ச்சி என்னவென்றால், எல்லாரும் கையொப்பமிட்ட தீர்மானத்தை சகோ. பால் சுதாகர் அவர்களுக்கு அனுப்பாமல், கையொப்பமில்லாத தீர்மானத்தின் உண்மை நகல் மட்டும் (Only a true Copy of resolution without any signatures) அனுப்பப்பட்டுள்ளது.

சகோ. கோஷியினுடைய காரியத்தைப் பார்க்கும்போது, அவர்தன் கடிதத்தில் சொல்லுகிறார் : "இப்பொழுது பந்து பால் சுதாகருடைய முற்றத்தில் இருக்கிறது என்று" (அதாவது முடிவு செய்ய வேண்டியது சகோ. பால் சுதாகருடைய பொறுப்பு). அப்படியானால், சகோ. பால்சுதாகர் அவர்கள், இந்த மூத்த ஊழியர்களின் கருத்து அல்லது விருப்பத்திற்கேற்பத்தான் தன்னுடைய பிரசங்கக்களை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சகோ. கோசி நிபந்தனை விதித்திருக்கிறாரா? அல்லது தேவனுடைய "முழு ஆலோசனை களையும்" சகோ. பால் சுதாகர் பிரசங்கிக்க வேண்டுமென்று விரும்புகிறாரா?

சில கேள்விகள்:

சபைகள் தோறும் மூப்பர்கள், உதவிக்காரர்களை ஏற்படுத்துவதற்காக, சகோ. பக்த்சிங் அவர்கள் 24 வருடங்களுக்கு முன்பாகவே சில சகோதரர்களை (ஆறுபேர்கள்) தெரிந்தெடுத் திருந்தார். அவர்களில் இப்பொழுது சகோ. K. பிலிப், சகோ. T.E. கோஷி, சகோ. லாசர்சேன், இவர்கள் மட்டும் உயிரோடு இருக்கிறார்கள்.

இந்த சத்தியங்களை ஸ்தல (உள்ளூர்) சபைகளிலே, நடைமுறைப்படுத்த, இவர்களுக்கு இன்னும் எவ்வளவு காலம் தேவைப்படும்? (சகோ. பக்த்சிங் அவர்கள் இவர்களுக்குக் கொடுத்த இந்த பிரதான வேலையை இவர்கள் செய்யாமல்) இதற்குப் பதிலாக, இந்த "ஸ்தல (உள்ளூர்) சபை - தெய்வீக ஒழுங்கு" ஆகிய இந்த சத்தியங்களை முழுப்பகையாய் எதிர்க்கிறவர்களோடு, வெகு நெருக்கமாக உறவாடி, அதேசமயம், இந்த வேதாகம சத்தியத்தை தைரியமாய்ப்போதிக்கிறவர்களை சபைகளைவிட்டு வெளியேற்றியும் வருகிறார்கள்.

இவர்கள் இந்த சத்தியத்தை எப்பொழுதும் போதிக்கத் திராணியுள்ளவர்களா? இந்த சத்தியத்திற்கு முதலிடம் கொடுத்து நடைமுறைப்படுத்த எப்பொழுதும் விரும்புகிறவர்களா யிருக்கிறார்களா?

எபிரோனில் கூடி வருகிற சபையாரின் கண்களை தேவன் திறக்க வேண்டும் என்பதே எங்களுடைய ஜெபமாயிருக்கிறது. (எபிரோன் விசுவாசிகள்)

Jesus Christ the same yesterday, to day, and for ever," Heb. 13:8
"I am Alpha and Omega, the beginning and the ending, saith the Lord, which was, and which is to come, the Almighty," Rev. 1:8
"And lo, I am with you always, even unto the end of the world." Matt. 28:20

THE INDIGENOUS CHURCHES IN INDIA TRUST

HEBRON, Golconda Cross Roads, Hyderabad – 500 020. (A.P) Tel: 27613066.

TRUSTEES:
Bro. K. Phillip
Bro. Theodore Reginald
Bro. Paul Sudhakar
Bro. G.T. Benjamin
Bro. F.C.S. Peter

Copy of the Resolution.

Resolved to ratify the meetings held on 05.09.06 and 21.09.06 and the decisions taken on 05.09.06 to restrain Bro. Paul Sudhakar from ministry for some time is upheld in the meeting on 21.09.06. It is decided to take him back in the ministry if he expresses his willingness to withdraw his papers on the "Local Church" unconditionally and confine himself to the ministry of Evangelism, Devotion and Edification of the Church.

Bro. K. Phillip..... [signature] ....
(Chairman)

Vice Chairman Bro. G.T. Benjamin.........................

Secretary Bro. Theodore Reginald...................

Treasurer Bro. F.C.S. Peter..............................

I have already given in writing of my withdrawal of my signature on the resolution of 5th September setting aside Bro Paul Sudhakar from the ministry and I also do not agree with the decision taken on 21st September. As such my signature on the resolution will have no meaning

[signature]
(G.T. Benjamin)

"THE INDIGENOUS CHURCHS IN INDIA TRUST"

'தி இண்டிஜீனஸ் சர்ச்சஸ் இன் இண்டியா டிரஸ்ட்'

எபிரோன் - ஐதராபாத்

'டிராஸ்ட்' அங்கத்தினர்கள்

சகோ.K.பிலிப், G.T.பெஞ்சமின், தியோடர் ரெஜினால்டு, F.C.S. பீட்டர், பால்சுதாகர்

Copy of the Resolution - தீர்மானத்தின் நகல்

05.09.2006 லும், 21.09.06லும் நடந்த கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டதை உறுதிப்படுத்தி சகோ. பால்சுதாகரை சிலகாலம் ஊழியத்திலிருந்து ஒதுக்கி வைப்பதற்காக 05.09.06ல் எடுக்கப்பட்ட தீர்மானம் 21.09.06ல் நடந்த கூட்டத்தில் நிலைநிறுத்தப்படுகிறது. சகோ. பால் சுதாகர், தான் எழுதின 'ஸ்தல சபை' பற்றிய பிரதியை நிபந்தனையின்றி திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்து, சுவிசேஷம் அறிவிப்பது, தியானிப்பது, சபையின் பக்தி விருத்திக்கு உதவுவது ஆகிய இந்த எல்லைக்குட்பட்ட ஊழியங்கள் மட்டும் செய்வதற்கு சம்மதிப்பாரானால், அவரை மறுபடியும் ஊழியத்திற்கு எடுப்பதற்குத் தீர்மானிக்கப்படுகிறது.

சகோ. K. பிலிப் - (தலைவர்) கையொப்பமிட்டுள்ளார்
உபதலைவர் - G.T. பெஞ்சமின் - கையொப்பமிடவில்லை
செயலர்-தியோடர் ரெஜினால்டு - கையொப்பமிடவில்லை
பொருளாளர் - F.C.S. பீட்டர் - கையொப்பமிடவில்லை

"சகோ. பால் சுதாகரை ஊழியத்திலிருந்து விலக்கி வைத்ததற்காக செப்டம்பர் 5ம் தேதி, 2006ல் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் நான் கையொப்பமிட்டதை நான் ஏற்கனவே எழுத்தின் மூலம் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டேன். மேலும் 21.09.02006 எடுத்த தீர்மானத்தையும் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். ஆகையால் அந்தத் தீர்மானத்திலுள்ள எனது கையொப்பம் செல்லத்தக்கதல்ல" G.T. பெஞ்சமின் (கையொப்பம்)

இணைப்பு - 4

எபிரோன் மெசஞ்சர் டிசம்பர் 10, 2006. "சகோ பாலசுதாகர், எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி, அவருடைய போதனைகளில் சிலவற்றை ஒதுக்கிவிட மனதில்லாதிருந்த படியினால், நம்முடைய ஐக்கியத்திலிருக்கும் சபைகளில் மட்டும் அவர் ஊழியம் செய்யாதபடிக்குத் தடைபண்ணப்பட்டிருந்தார். இது 2006 செப்டம்பர் 17ம் தேதி 'எபிரோன் மெசஞ்சர்' பத்திரிகையில் வெளியிடப்பட்டது. இப்பொழுது சகோ. பால்சுதாகர், ஐதரபாத்திலே, சுயாதீனமாக ஆராதனைக் கூட்டம் ஆரம்பித்து இருக்கிறார். அவரும், அவரோடு ஐக்கியப்படு கிறவர்களும் அல்லது அவரை எந்த ஊழியத்திற்காவது அழைக்கிறவர்களும், நம்மோடு இணைந்து செயல்படுவதி லிருந்துத் தங்களையும் பிரித்துக் கொள்ளுகிறவர்களாவார்கள்."

(எபிரோன் மெசஞ்சர் டிசம்பர் 10, 2006)

இணைப்பு - 5

'வெப்சைட்' (Website) *செய்திகள் அக்டோபர் 13,2006*

கர்த்தருக்குள் அருமையான சகோதரர்களே, சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள். சகோ. பால்சுதாகர் அவர்களின் காரியங்கள் பற்றிய உங்கள் 'வெப்சைட்டிற்காக' (website) நன்றி. 'கீழே தள்ளப்பட்ட' (Down under) எங்களில் சிலருக்கு இது பெரிய உதவியாயிருக்கிறது. இந்த சபை ஊழியத்தில் நான் 47 வருடங்களாக இருந்திருக்கிறேன். சகோ. பக்த்சிங் அவர்களால் நான் ஏற்படுத்தப்பட்டு, சகோ. கோஷி அவர்களோடு 2001ல் வட அமெரிக்கா பரிசுத்த சபை கூடுதலில் ஊழியத்தில் பகிர்ந்து கொண்டவன். இந்தியாவின் சகோ. பக்த்சிங் (Bro.Bakht Singh of India) என்ற சகோ. பக்த்சிங் அவர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகத்தில் கூட பக்கம் 348ல் என்பெயர் காணப்படுகிறது. ஆனால், சகோ. பால்சுதாகர் அவர்கள் தன்னுடைய புத்தகத்தில் எழுப்பிய இதே காரியங்களை, நானும் எழுப்பியதின் காரணமாகக் கடந்த ஆண்டுகளில் அதிகத்தொல்லைகளை அனுபவித்தேன். மேற்கொண்டும் செய்திகளை அறிய, வெப்சைட்டை கவனித்துக்கொண்டிருப்பேன்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பான

(Ron Jarlett, Sydney, Austalic)

ரான் ஜார்லெட், சிட்னி, ஆஸ்திரேலியா, அக்டோபர் 13, 2006

இணைப்பு - 6

(NEE) நீ

அக்டோபர் 8, 2006

அருமை நண்பர்களே,

எபிரோன் சபையிலிருந்து சகோதரன் பால்சுதாகர் அவர்களைப் புறம்பாக்கினது (Excommunication) இருதயத்திற்கு அதிர்ச்சியைக் கொடுக்கிறது. இந்நாட்கள் மோசமான நாட்கள். ஆனால் மோசமான காரியங்கள் நல்லவர்களை உற்சாகப்படுத்துகிறது (தானி.11:31,32). சகோ. பால்சுதாகர் அவர்களின் மேன்மையான ஆவிக்குரிய நிலையையும், ஊழியத்திற்காக அவர் எங்கும், எல்லாராலும் விரும்பி அழைக்கப்படுவதையும் விரும்பாத, பொறாமையின் ஆவியும் வெறுப்பும் நிறைந்தவர்கள், அவருக்கு எதிராகக் குற்றம் சாட்ட சமயம் தேடிக் கொண்டிருந்தார்கள் (தானி.6:4). தாவீதின் வெற்றியும், ஜனங்களுடைய சந்தோச ஆடல்பாடல்களும், சவுலுக்கு விசனத்தையும், எரிச்சலையும் உண்டாக்கியது. அந்தநாள் முதற்கொண்டு, சவுல் தாவிதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான். 1சாமு.18:9. அநேக வருடங்களாக தேவனுக்கு முழுநேர ஊழியர்களாகவும், மூப்பர்களாகவும் ஊழியம் செய்த பிறகும் கூட இப்படித்தான் நம்முடைய மனித இருதயம் இருக்கிறது. அவர்கள் எதை விதைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அதையே அறுப்பார்கள். நாம் தேவனுக்கச் செவி கொடுக்கிறதினாலே, தேவ ஆவியானவராலே உருவாக்கப்பட்ட உள்ளான குணாதிசயங்களில் நாம் குறைவு பட்டுக்காணப்படுவோமானால், நம்முடைய வெளிப்பிரகாரமான செயல்களும், சொற்களும் தேவனுக்கு முன்பாக ஒன்றுக்கும் உதவாது என்பதை உணர நாம் எப்போதுமே தவறிவிடுகிறோம். இப்படிப்பட்ட ஜனங்களாலே, எபிரோனிலே (ஹைதரபாத்) ஆவிக்குரிய ஆரோக்கியமான சூழ்நிலைப் பராமரிப்பானது அழிந்து கொண்டிருக்கிறது. நாம் இப்படிப்பட்டவர்களை புரிந்து கொண்டு, அவர்களை விட்டு விலகியிருக்கவேண்டும். ஸ்தல சபையின் மையக்கருவாகிய ஆவிக்குரிய 'மீதியாயிருக்கிறவர்கள்' (Spiritual Remnant) விழிப்பாயிருந்து, தேவனுக்குரியவர்களாகிய உண்மையான பரிசுத்தவான்களைப் பாதுகாப்பதற்காக, கர்த்தருக்காக தைரியமாய்

நிற்கவேண்டும். பெலசாலிகளான கோலியாத்துக்களை மேற்கொள்வதற்காக, சேனைகளின் கர்த்தர் ஆவிக்குரிய தாவீதுகளைப் பலத்தால் இடைக்கட்டுகிறார். ஆனால் நமக்கு விசுவாசமும், தாவீதின் செயலும் தேவைப்படுகிறது. 1சாமு.17:45-54. எபிரோனிலிருக்கிற இந்த எல்லா சூழ்நிலைகளுக்காக நாங்கள் சபையாகத் தொடர்ந்து ஜெபித்துக் கெண்டிருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள்
உங்கள்
(NEE) நீ

அக்டோபர் 8,2006

இணைப்பு - 7

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!!!

சகோ. தீபக் ஆக்கில்லாவுடைய கருத்துக்களை நாங்கள் உறுதியாக ஆமோதிக்கிறோம். எபிரோனின் நஷ்டமானது, எங்கோயிருக்கிற யாரோ சிலருக்கு நிச்சயமாக லாபமாயிருக்கும். ஆம்! நிச்சயமாக இது உண்மையே.

ஆனால் எங்களுக்கு ஒரு சிறு சந்தேகம். எபிரோனிலிருக்கிற யாராவது, அதாவது தங்களைத் தாங்களே தேவ ஊழியர்கள் என்று அழைத்துக் கொள்கிறயாராவது, பின்வரும் கேள்விகளுக்குத் தைரியமாய்ப்பதில் சொல்ல முடியுமா?

1) ஒரு மனிதனை சபையிலிருந்து தள்ளிவைக்க அல்லது வெளியேற்ற இந்த ஜனங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

2) இப்படிச் செய்யச் சொல்லி தேவன் அவர்களிடம் சொன்னாரா?

3) சபைக்கு நாம் போகும்போது, நாம் திட்டமாய்க் கைக்கொள்ள வேண்டிய எந்த ஒரு விதிமுறைகளையும் தேவன் வைக்கவில்லை என்பதை நாம் அறிவோம். திட்டமாக, ஒரு சபைக்கு, ஜாதி, மத வித்தியாசமில்லாமலும், விசுவாசி-அவிசுவாசி என்ற வித்தியாசமு மில்லாமலும் யார் வேண்டுமானாலும் செல்லலாம். அப்படியிருக்க, சகோ. பால்சுதாகர் அவர்கள் எப்படி வெளியே அனுப்பப்பட்டார்?

அவர் நம்மில் ஒருவரல்லவா??? தேவ சந்நிதானத்தில் அவர் சென்று அங்கு அவரை ஆராதிக்க எந்த உரிமையுமில்லையா?

4) தங்களைத் தாங்களே தேவ ஊழியர்கள் என்று அழைத்துக் கொள்கிற சுயநீதியுடையவர்களாகிய இந்த ஊழியர்கள் முதலாவது தங்களைத் தாங்களே ஆராய்ந்து பார்க்க வேண்டும்; மற்றவர்களையல்ல, முதலாவது தங்களைத்தாங்களே நியாயம் தீர்த்துக் கொள்ள வேண்டும். நம்மை நாமே சோதித்தறிய வேண்டும் என்று தெளிவாய்ச் சொல்லுகிற வேதபுஸ்தகத்தின் அடிப்படை போதகத்தைக்கூட அறியாதவர்களாய் இந்த ஜனங்கள் இருப்பது மிகவும் துயரமான ஒரு காரியமாகும்.

கர்த்தருக்குள் உங்கள்

இணைப்பு - 8

WHY I HAVE TO LEAVE HEBRON?

BRO. DANIEL SONG

ஏன் நான் எபிரோனை விட்டு வெளியேற வேண்டியதாய் இருக்கிறது? - சகோ. டேனியல் சாங்

(இந்த சகோ. டேனியல் சாங் அவர்கள், காட்டுமண்டிலுள்ள ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்தவர். கர்த்தரை, விசுவாசித்து ஏற்றுக்கொண்டதினால், மேற்கொண்டு ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஹைதராபாத்திலுள்ள எபிரோனுக்கு வந்தார். இப்பொழுது எபிரோனில் அவர் கண்டவைகளை மனபாரத்தோடு எழுதுகிறார்.)

"இந்தக் கடிதத்தை எழுதுவதின் மூலம் நான் மிகவும் சோர்வடைந்து, மன வேதனைப்படுகிறேன். காரணம், எபிரோன் சபையாகிய ஒரு பெரிய குடும்பத்திலிருந்து நான் என்னைப் பிரித்துக் கொண்டிருக்கிறேன். யார் தன்னுடைய குடும்பத்திலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ள விரும்புவார்கள்? யாருமே விரும்ப மாட்டார்கள். ஆனால் அது ஒரு குடும்பம்போல் இல்லாவிட்டால்? அந்தக் குடும்பத்திலே ஒருவரை ஒருவர் மன்னிக்கா விட்டால்? மேலும் குடும்பத்திலுள்ள ஒரு சகோதரனைக் குடும்பத்திலிருந்து வெளியேற்றுவதுமட்டுமல்ல, வேதாகம சத்தியங்களையே வெளியேற்றும் போது, யார்தான் அந்தக் குடும்பத்தில் இருக்க

விரும்புவார்கள்? தேவனுடைய வசனத்தைப்பற்றி அந்தக் குடும்பம் எப்படிப்பட்ட மனப்பான்மையுடையதாயிருக்கிறதென்பதை இது காட்டுகிறது. முக்கியமாக என்னைப் போன்ற குழந்தைகளுக்கு (வளர்ந்து வரும் ஆரம்ப விசுவாசிகளுக்கு) இது இடறலாயிருக்கிறது. உடனடியாகவோ, அல்லது சற்று காலதாமதமாகவோ இந்த குடும்பத்தின் காரியங்கள் சீரடையும் என்ற நம்பிக்கையில் இந்தக் குழப்பமான குடும்பத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறவர்களை நினைத்து நான் மிகவும் வேதனைப்படுகிறேன். மறுபக்கத்தில், ஆரம்பகால விசுவாசத்தில் தத்தித்தத்தி நடந்து கொண்டிருக்கிற என்னைப் போன்றவர்களுக்கு, எந்தவிதமான ஆவிக்குரிய ஆலோசனையும் கொடுக்காமலிருக்கிற சகோதரர்களை எண்ணி நான் வேதனை அடைகிறேன். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை தேவன் எபிரோனில் கொண்டு வந்ததின்மூலம் என்னுடைய கண்கள் திறக்கப்பட்டதற்காக நான் தேவனுக்குத் துதி செலுத்தினபோதிலும், என் கண்கள் இன்னும் கண்ணீரால் முற்றிலும் நனைந்திருக்கின்றன.

"நம்முடைய கண்களைவிட்டு ஆகாரமும், நம்முடைய தேவனின் ஆலயத்தைவிட்டுச் சந்தோசமும், மகிழ்ச்சியும் நீக்கப்படவில்லையோ?" யோவேல் 1:16

நான் காட்மண்டுவிலிருக்கும் போது, அங்குள்ள ஸ்தல சபையில் திருப்தி அடையவில்லை, காரணம் நான் சிறப்பானதைப் பெறமுடியவில்லை. எனவே, நான் ஆவிக்குரிய வளர்ச்சியடையவே இல்லை என்பதை நான் உணர்ந்தேன். ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; சகோ. பக்த்சிங் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு புஸ்தகத்தைக் கர்த்தர் என் பார்வைக்குக் கொண்டு வந்தார். நான் தேர்ந்தெடுக்கக்கூடிய அநேக காரியங்கள் எனக்கு முன்பாக இருந்தன. (என்னை உயர்த்திக் கூறிக்கொள்ள நான் முயற்சிக்கவில்லை) என்னுடைய பெற்றோர்கள், நண்பர்கள் மற்றும் யாவரும் எனக்குத் தொடர்ச்சியாகக் கொடுத்த தடைகள், நிந்தனைகள், சோர்வுகள் யாவும் இருந்தபோதிலும், நான் எபிரோனைத் தெரிந்து கொண்டேன். நான் அங்கே இருக்க வேண்டும் என்று, கர்த்தரை நம்பி ஜெபித்தேன். கர்த்தர் என் ஜெபத்திற்குப் பதிலளித்தார்.

தேவனுடைய அன்பான பிள்ளைகள் இரவும், பகலுமாகப் பிரயாசப்பட்ட (உழைத்த) அந்த எபிரோன் கட்டிட எல்லைக்குள்ளே நான் நடந்து வரும்பொழுது, நான் மிகவும் மகிழ்ச்சியாயிருந்தேன். கர்த்தருக்குள் நான் முன்னேறிச்செல்ல என்னை மிகவும் உற்சாகப்படுத்தின அருமை சகோ. G.T.பெஞ்சமின் அவர்களுக்கு நான்

நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அவர்மட்டுமல்ல, நான் சந்தித்த மற்ற எல்லா போதகர்கள், மூப்பர்கள், உடன் வேலையாட்கள், விசுவாசிகள் மற்றும் யாவருக்கும் நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

என்னுடைய தனிப்பட்ட, திட நம்பிக்கையில் நான் இதை எழுதுகிறேன்; யாருடைய தூண்டுதலின் பேரிலோ, அல்லது தேவனுடைய வசனத்தைத் தெளிவாய்ப் பொருள்விளக்கிப் போதிக்கும், சகோ. பால்சுதாகர் அவர்களின் தாலந்தினால் (திறமையினால்) தூண்டப்பட்டோ நான் இதை எழுதவில்லை. நான் எந்த ஒரு மூத்த சகோதரரின் குறைகளையும், பெலவீனங்களையும் குறிப்பிட்டு சொல்ல விரும்பவில்லை, காரணம், நான் தேவனுடைய பெலவீனமான பிள்ளை. ஆனால், நமது சகோதரனுக்கு (சகோ.பால் சுதாகருக்கு) மன்னிப்புக் கொடுக்காதது, ஒரு விநோதமான காரியமாய் (ஆச்சரியமான காரியமாய்) இருக்கிறது!

"நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயங்களாயிருக்கிறது. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?" 1கொரி. 12:13-16

"சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிற வைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம், நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும், நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை. சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும், ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்". 1கொரி. 12:22-26

நான், சகோ. பால் சுதாகர் அவர்கள் எழுதின வாசகங்களை "ஸ்தல, (உள்ளூர்) சபை-தெய்வீக ஒழுங்கு" மறுபடியும் படித்துப்பார்த்தேன்,

அதேபோல் சகோ. தியோடர் ரெஜினால்டு அவர்களால் பதிலுக்கு எழுதப்பட்ட வாசகங்களையும் படித்துப் பார்த்தேன். பிந்தினவராகிய சகோ. தியோடர் ரெஜினால்டு அவர்கள் எழுதின பதிலை, என்னுடைய ஆவி ஏற்றுக் கொள்கிறதில்லை. *தேவனுடைய வீடாகிய எபிரோனுக்குள் இருக்கிற சகோதரர்களையும், சகோதரிகளையும் 'தேவ ஊழியர்கள்' என்றும், எபிரோனுக்கு வெளியே வசிக்கிறவர்களை 'விசுவாசிகள்' என்றும் பிரித்து, வித்தியாசப்படுத்திக்காட்டும் இந்தப் பெயர்களானது, மற்றக் கிறிஸ்தவப் பிரிவினர் சொல்லும்* ('CLERGY-LAITY') *'போதகர்-பொதுமக்கள்' அல்லது 'குருவானவர்-மத அறிவு இல்லாத பொதுமக்கள்' என்ற பெயர்களின் நவீனப் பெயர் மாற்றமே அல்லாமல் வேறல்ல.* (எழிதாய் விளங்கிக்கொள்ள வேண்டுமானால்: மற்ற கிறிஸ்தவ பரிவினர்கள் 'குருவானவர்'-'பொது ஜனங்கள்' என்று பிரித்து வைத்தார்கள். இவர்கள், 'தேவ ஊழியர்'-'விசுவாசிகள்' என்று பிரித்து வைத்துவிட்டார்கள். அவர்கள் பழைய ஏற்பாட்டு முறைப்படியான 'ஆசாரிய வஸ்திரங்கள்' (PRIESTLY DRESS) அணிந்து கொண்டார்கள். அதை மட்டும் இவர்கள் இன்னும் செய்யவில்லை. மொத்தத்தில் இருசாராரின் பதவிப் பெயர்கள்தான் வித்தியாசமே தவிர, எண்ணங்கள், செயல்கள் ஒன்றுதான். இது மொழி பெயர்ப்பாளர் விளக்கம்)

எபே. 1:21-23 "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து......." எபே. 2:18-22

நான் 'எபிரோன்' சபை ஐக்கியத்தில் திருப்தியாகவில்லை. நான் வெறுமனே, சபைக்கு ஒழுங்காகப் போகிறவனாகவோ, சபைக்குச் சபை தாவி அலைகிறவனாகவோ, பிரசங்கத்தை மாத்திரம் ருசிக்கிற ஒருவனாகவோ இருப்பதில் சோர்ந்து போனேன். இந்த மந்தமான நிலையில் இருப்பதில் நான் திருப்தியடையவில்லை. இதற்காக நான் இங்கு வரவுமில்லை. ஆனால் அவருடைய இராஜ்ஜியத்தினிமித்தம் நான் சுறு சுறுப்பாய் இயங்கவே இங்கு வந்தேன். அதினாலே இங்கே நான் பெரிய அளவில் பெயர்பிரஸ்தாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் ஊழியங்களில் பங்கு கொள்ள ஆசைப்படுகிறேன் என்ற அர்த்தமல்ல.

நம்முடைய தகப்பன்மார்கள் ஒருவரோடுவர் சண்டையிட்டுக் கொண்டார்கள் என்று சொல்லுவது ஒரு துக்கமான கதையாக இருக்கிறது. "நீங்கள் ஒருவரை கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள்,

அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையா யிருக்கங்கள்". கலா. 5:15

நாம் வீண் மகிமையை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபப்படுத்தாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொருமை கொள்ளாமலு மிருப்போம். கலா. 5:19-21

'எபிரோனிலே' இந்நாட்களில் பிரசங்கங்கள் நன்றாகச் செய்யப்படுகிறது. ஆனால் அவைகள் வாழ்க்கையில் அப்பியாசிக்கப் படுவதில்லை. வாலிபர்களாகிய நாங்கள் போசிக்கப்படவில்லை, ஆலோசனை மட்டும் சொல்லப்படுகிறோம் என்று நான் தனிப்பட்ட முறையில் உணருகிறேன்.

நான் இப்படிச் சொல்லுவது அநேகருக்குத் தவறாகத் தோன்றலாம். ஒருவேளை, சிறுபிள்ளைத்தனமானது, உணர்ச்சிவசமானது, தேவவசனத்திற்கு ஒவ்வாதது, மாம்சப்பிரகாரமானது என்று கூட நீங்கள் சொல்லலாம்.

கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்ப்படியவேண்டிய விசயத்தில் நானும்கூடத் தவறியிருக்கிறேன். ஆனால் இந்த மிகப்பெரிய இக்கட்டான சூழ்நிலையில் நான் மிகவும் திணரிக் கொண்டிருக்கிறேன். 'எபிரோன்' எனக்கு உதவிச் செய்யமுடியாது என்பதை நான் அறிவேன். நானும் அதைத் தாங்கிட முடியாது, அதுவும் என்னைத் தாங்கிட முடியாது என்பதை அறிவேன். ஒன்று, என்னுடைய பெரிய குடும்பத்தைவிட்டு (எபிரோனைவிட்டு) நான் வெளியேற வேண்டும் அல்லது அதனுடைய வளைந்து கொடுக்காத (பிடிவாதம்) குணத்திற்கு நான் ஒத்துப்போக வேண்டும். நான் இரண்டாவது காரியத்தைத் தெரிந்து கொள்கிறேன். நான் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகக் கட்டாயப்படுத்தப்படுகிறேன். நான் ஜெயங் கொள்ளுகிற ஒருவனாய் இருக்க விரும்புகிறேன். "நீ விழித்துக் கொண்டு சாகிறதற்கேது வாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை" வெளி. 3:2 ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்", வெளி. 3:5

நான் இளைஞன் என்பதை நான் அறிவேன். ஒருவேளை, நான் என்னுடைய உலக ஞானத்தில் சார்ந்திருக்கிறேன் அல்லது கசப்பான உணர்வோடு இதை எழுதுகிறேன், ஆழ்ந்த கவலையில் அல்லது அறியாமையில் இதை எழுதுகிறேன் என்று நீங்கள் நினைக்கக்

கூடுமானால், எனக்குத் தெளிவுபடுத்தி என்னை வழி நடத்தும்படி நான் ஜெபித்து உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். ஆனால் நான் எழுதுவது சரிதான் என்று நீங்கள் எண்ணுவீர்களானால், நான் 'எபிரோனை விட்டு விலகி', அந்த புதிய ஐக்கியத்தில் (சபையில்) என்னை இணைய விடுங்கள்.

நான் இந்தக் காரியங்களை எழுதினதினால் தேவனையும், உங்களையும் துக்கப்படுத்தியிருப்பேனாகில் தேவன் என்னை மன்னிப்பாராக.

இப்படிக்கு,

(His troubled child) மனக்கிலேசமடைந்திருக்கும் அவருடைய பிள்ளை

டேனியல் சாங்

(DANIEL SONG)

"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" யோவான் 8:32

"நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களைத் தடை செய்தவன் யார்?" கலா. 5:7 (3:1)

இணைப்பு - 9

Bro. Kiran Kumar - Kwait - 3 October 2006

சகோ. கிரன்குமார் - குவெய்த் - அக்டோபர் 3,2006

"கர்த்தருக்கு ஸ்தோத்திரம் - கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரர்கள், சகோதரிகளுக்கு வாழ்த்துதல்கள்.

சகோதரர் பால்சுதாகர் அவர்கள் சபையை விட்டு விலக்கப்பட்ட செயலானது ஒரு துக்க கரமானதும், இருதயத்தைப் பிழக்கும் ஓர் சம்பவமாகவும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, நமது ஐக்கியத்திற்கே ஒரு மிகப்பெரிய இழப்பாகும்.

சகோ. பால் சுதாகர் எழுதின அந்த செய்தியை நான் வாசித்துப் பார்த்திருக்கிறேன். சகோதரர் பக்த்சிங் அவர்களை அவர் உயிரோடிருக்கும் போது நான் பார்த்ததில்லை. ஆனால் அவருடைய அநேக பிரசங்கங்களை நான் கேட்டிருக்கிறேன், தேவன் அவருக்குக் கொடுத்த பாரங்களையும், கருத்துக்களையும் கொட்டி எழுதியிருக்கிற அவருடைய புஸ்தகங்களையும் வாசித்திரக்கிறேன். ***சகோ. பால்சுதாகர்***

அவர்களால் எழுதப்பட்ட செய்தியானது, சகோ. பக்த்சிங் அவர்கள் எழுதின கருத்துக்களின் எல்லையை ஒருபோதும் தாண்டிப்போக வில்லை என்பதை, அதை வாசித்தஎல்லா வாசகர்களும் தெளிவாக அறிவார்கள். பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள மாதிரியின் படியாக மூப்பர்களை ஏற்படுத்துவதையும், தேவ ஊழியர் என்ற வார்த்தைக்கு உண்மையான அர்த்தம் என்ன? ***அது முழுநேர ஊழியரோ அல்லது பகுதி நேர ஊழியரோ எல்லாரும் உன்னதமான தேவனுடைய ஊழியர்களே*** என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கருத்தூன்றி கவனிக்க வேண்டிய ஒரு பிரச்சனையாகும். அதைப் புறக்கணிப்பது என்பது இந்த சாட்சியைப் பாதுகாப்பதிலும், கர்த்தருடைய ஊழியம் விரிவடைவதிலும் தவறுவதாகும். அநேக ஆத்துமாக்களை ஆவிக்குரிய வளர்ச்சியடைய விடாமல் தடைசெய்வதுமாகும். ஆனால் சில மக்கள் சகோ. பால் சுதாகருடைய அந்தச் செய்தியை சரியான முறையில் விளங்கிக் கொள்ள வில்லை என்பது துர் அதிர்ஷ்ட வசமான ஒன்றாகும். அவர்கள் சகோ. பால்சுதாகர் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்து, அவர் எழுதின கருத்துக்களை அவர் விளக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருப்பார்களாகில் அவர்கள் அந்தச்செய்தியை அல்லது அவருடைய பாரத்தைப் புரிந்திருப்பார்கள். ஆனால் சாத்தான் அந்த வழியை அடைத்து விட்டான்.

நான் அதிக உறுதியாய் நம்புகிற ஒரு காரியம் என்ன வென்றால், அப்போஸ்தலர்களுடைய காலம் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும், கர்த்தருடைய வசனத்தைப் புறட்டிப் போடச் செய்யும் முயற்சியில் சத்துரு சாத்தான் திரும்பத்திரும்பத் தோல்வியே கண்டுள்ளான். தேவ ஊழியர்களை சிறையில் தள்ளுவதிலும், சித்தரவதை செய்வதிலும் சாத்தான் வெற்றி கண்டுள்ளான். ஆனால் சிறைச்சாலைகளிலிருந்தும், சித்திரவதைகளிலிருந்தும் வல்லமையோடு அவர்கள் கொடுக்கும் வல்லமையான தேவனுடைய வசனத்தைத் தடுத்து நிறுத்துவதில் அவன் தோல்வியடைந்து விட்டான். அதைப் போலவே, இந்தநாளிலும் கூட, சாத்தான் சில மூப்பர்களையும் ஊழியர்களையும் உபயோகித்து வல்லமையாய் தேவ செய்தி கொடுக்கும் ஒரு ஊழியரை சபை ஐக்கியத்திலிருந்து ஒதுக்கி வைக்கலாம். ஆனால் தேவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தை அவனால் எடுக்க முடியாது. நாம் எல்லாரும் செய்யக்கூடிய ஒரு காரியம் என்னவென்றால், சகோதரர் கணிக்கர் அவர்கள் (வெப்சைட்டில்) ஆதி. 9:22-23 லிருந்து மேற்கோள் காட்டினதுபோல், நம்முடைய மூப்பர்கள், ஊழியர்களின் நிர்வாணத்தை

வெளிப்படுத்திக்காட்டுவதைவிட, அவர்கள் நிர்வாணத்தை ஜெபமாகிய வஸ்திரத்தால் மூடிப்போடுவோமாக. மேலும், பிலிப்பியர் 4:6ல் "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள் என்று சொல்லப்பட்டபடி, தேவ ஊழியர்கள் கீழே அடக்கி வைக்கப்படாமல், தேவ தீர்மானத்தின்படி, தேவனுடைய சொந்தவழியிலே அவர்கள் வல்லமையாய் உபயோகிக்கப்பட வேண்டும் என்கிற நம்முடைய வேண்டுதல்களை தேவனுக்குத் தெரியப்படுத்துவோம். சுவிசேஷ ஊழியம், ஜெப தியான வாழ்க்கை இவற்றிற்காக சகோ. பால் சுதாகர் அவர்கள் செய்த அர்ப்பணிப்புக்காக நாம் ஜெபிப்போம். மேலும் சகோதரனுடைய குடம்பத்திற்காகவும் ஜெபிப்போம்.

இன்னொரு துர்அதிர்ஷ்டமான காரியம் என்னவென்றால், பெரிய சபையாகிய எபிரோன் சபை தொடங்கி, சிறிய சபைகள் வரைக்கும் உள்ள ஜனங்கள் ஒரு முக்கிய உண்மையை மறந்து விட்டார்கள். அதாவது, எபிரோன் என்பது பெரிய கட்டிடங்களோ, அல்லது பெருங்கூட்டங்களோ அல்ல. அது சகோ. பக்த்சிங் அவர்கள்மூலம் வெளிப்படுத்தப்பட்ட போதனைகள், மாதிரி, வேதவசனத்தின்படியான ஒழுங்கு இவற்றிற்காக, உலகப்பிரகாரமான கிறிஸ்தவ பிரிவுகளிலிருந்து பிரிந்து வந்த அல்லது பரிக்கப்பட்ட ஜனங்களின் ஐக்கியம் ஆகும். இந்தவிதமான வெளிப்பாடும், செயலும், இல்லாதபட்சத்தில் அது ஹைதராபாத்திலுள்ள எபிரேயன் என்றாலும் சரி, வேறெந்த சபை என்றாலும் சரி, அது தேவன் திட்டமிட்ட அல்லது சகோ. பக்த்சிங் அவர்கள் பிரயாசப்பட்ட சபையாக இருக்க முடியாது. அநேக ஜனங்கள் அவர்களுடைய ஆரம்பம் நன்றாகவே இருந்தபோதிலும், காலப்போக்கில் அவர்கள் இந்த சத்தியத்தை மறந்து, பதவிக்காகவும், புகழுக்காவும், (பெரிய மற்றும் சிறிய சபைகளிலும் உள்ளவர்கள்) தேவனுடைய சித்தத்தை விட்டு விலகிப்போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நாம் அனைவரும், இந்த சம்பவமானது (அதாவது சகோ. பால்சுதாகர்அவர்களை ஒதுக்கி வைத்த சம்பவமானது) தூங்கிக் கொண்டிருக்கிற நம்மைத் தட்டி எழுப்பும் ஓர் அழைப்பாகக் கருதி, நமது சபைகளுக்காகவும், நமது ஊழியர்கள், அவர்கள் முழுநேர ஊழியர்களோ அல்லது பகுதி நேர ஊழியர்களோ, அவர்களுக்காகவும் ஜெபிப்போமாக! அன்பின் வழ்த்துக்கள்.

சகோ. கிரன்குமார்,

அக்டோபர் 3,2006, குவெய்த்.

இணைப்பு - 10

(ஹைதராபாத்திலுள்ள 'எபிரோன்' சபையில் சகோ. பக்த்சிங் அவர்களால் மூப்பராக ஏற்படுத்தப்பட்ட சகோ G.T. பெஞ்சமின் அவர்கள், கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளுக்கும், உலகெங்குமுள்ள பரிசுத்தவான்களுக்கும் 09-06-07-ல் உண்மையை விளக்கி எழுதி, இந்தக் காலகட்டத்தில் அனைவரும் சத்தியத்திற்காக நிற்க வேண்டுமென்று பாரத்தோடு வேண்டிக்கொண்ட ஒரு விண்ணப்பத்தின் தமிழாக்கம்)

கடிதத்தின் நாள்:-09.06.07

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதர சகோதரிகளே! உண்மையாத் தமது சபையைக் கட்டுகின்ற சிற்பியாகிய நமது உயர்த்தப்பட்ட இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்.

சகோ. பால்சுதாகர் அவர்களை நமது ஐக்கியத்திலிருந்தும், ஊழியத்திலிருந்தும், அவசர அவசரமாய் வெளியேற்றிய (Expulsion) விஷயத்தைப் பற்றி பாரம் நிறைந்த (கனத்த) இருதயத்தோடு சில உண்மைகளை உங்களுக்கு எழுதுகிறேன். கடந்த 05-09-2006-இல் நடைபெற்ற இந்த பாழாக்கும் சம்பவம், எபிரோன் சபையின் சரித்திரத்தில் இதுவரை நடந்திராத ஓர் நாச வேலையாகும். கடந்த 2006 செப்டம்பர் 5-ம் நாள் சில 'டிரஸ்டீஸ்களும்', சில மூத்த முழு நேர ஊழியர்களும் சேர்ந்து ஒரு சதித் திட்டம் தீட்டி, கூட்டம் நடத்தினார்கள். ஆனால் நான் (G.T. பெஞ்சமின்) அந்த கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்படவில்லை. முறைதவறிய இந்தச் செயலை நான் அறிந்து கொண்டவனாக, இந்தக் கூட்டத்திற்கு வரவேண்டும் என்பதற்காக, என்னுடைய மற்ற அலுவல்களை ரத்து செய்துவிட்டேன். எது சம்பவித்ததோ அது சரித்திரமாகின்றது. நமது சகோதரனை (சகோ. பால்சுதாகரை) குற்றப்படுத்தவோ அல்லது வெளியேற்றவோ வேண்டாம் என்று பலமுறை நான் கேட்டுக் கொண்ட எனது வேண்டுகோள் வீணாகிவிட்டது. சகோ. பால்சுதாகரை சபையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று அவர்கள் தீட்டிய சதித்திட்டம் முழுவதும் ***பொறாமை எண்ணத்தினால் உண்டானது. சகோ. பால்சுதாகருக்கு எதிராக அவர்கள் கொண்டு வந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் கெடுக்கும் நோக்கம் கொண்டதும், பொய்யானதுமாகும்.***

கடைசியாக 'எபிரோன் மெசஞ்சர்' பத்திரிகையை அச்சிடவும், வெளியிடவும் அங்கீகாரம் பெற்றிருக்கின்ற (Authorized Printer and Pub-

lisher) எனக்குத் தெரிவிக்காமல், எனது அனுமதியும் பெறாமல் இரகசியமாக அச்சிட்டு, சகோ. பால்சுதாகரை சபையை விட்டு ஒதுக்கி வைத்து விட்டதாக உலக முழுவதும் தெரியப்படுத்திவிட்டார்கள். ***அவர்களுடைய நோக்கம் சகோ. பால் சுதாகரைக் களங்கப்படுத்த வேண்டும் என்பதாகும்.*** அவர் (சகோ.பால்சுதாகர்) ஒரு புதிய உபதேசத்தைப் போதித்து, சகோ. பக்த்சிங் அவர்களுடைய போதகத்திற்கும், அப்பியாசத்திற்கும் எதிராக உபதேசிக்கிறார் என்று குற்றப்படுத்தி, அதன் மூலம் ***சகோ. பால்சுதாகரின் நற்பெயரைக் கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த குற்றச்சாட்டு வந்தது. இதற்காக அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள் யாவும் முழுப் பொய்.*** ஆனால் உண்மையில் சகோ. பால்சுதாகர் எழுதின 'ஸ்தல சபை தெய்வீக ஒழுங்கு' (The Local Church - Divine Order) என்ற புத்தகத்தை ஒருவர் ***நடுவு நிலையோடு வாசிப்பாரானால்,*** அந்த புத்தகம் சகோ.பக்த்சிங் அவர்களின் உபதேசத்தையும், சபையைப் பற்றிய திட நம்பிக்கையையும் திட்டவட்டமாய் ஆதரிக்கின்ற புத்தகம் என்று அறிந்து கொள்ள முடியும். சகோ.பக்த்சிங் அவர்களுக்கு கர்த்தர் வெளிப்படுத்திய புதிய ஏற்பாட்டு தரிசனத்தின் அடிப்படையிலும் அமைந்த புத்தகமாக இதைப் பார்க்க முடியும். இதன் பின்பு, இக்கட்டான இந்த சூழ்நிலையின் ஆபத்திலிருந்து மீளுவதற்காக இந்த மூத்த சகோதரர்களுடன் நான் பேசிப்பார்த்தேன். நான் மறுபடியும் ஓர் ஆலோசனை கூறி, சகோ.பால்சுதாகர் எழுதின அந்த 'ஸ்தல சபை- தெய்வீக ஒழுங்கு' என்ற புத்தகத்தை உலகமெங்குமுள்ள தேவ மனிதர்களுக்கு அனுப்பி அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்போம் என்று கூறினேன். அதற்கு அவர்கள் திட்டவட்டமாக எனது ஆலோசனையை மறுத்துவிட்டார்கள். முதலில் அவர்கள் வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் ஒத்துக் கொள்ளாவிட்டாலும், வேத வசனத்தின் ஆதாரத்தில் ***சகோ. பால் சுதாகர் எழுதிய சத்தியங்கள் எல்லாமே முற்றிலும் சரியானவைதான் என்று சில காலம் கழித்து அவர்கள் ஒத்துக் கொண்டார்கள்.***

கடந்த 10 மாதங்களாக நான் கண்டு கொண்டது என்னவென்றால், ***இந்த மூத்த சகோதரர்களின்' வன்மமும், வெறுப்பும், பொறாமையுமே சகோ. பால்சுதாகரை சபையைவிட்டு வெளியேற்றியது.*** தேவனுடைய வசனத்தை பயமின்றியும், பட்சபாதமில்லாமலும் போதிக்கின்ற ஒரு உண்மையான ஊழியக்காரன் நமது சபை ஐக்கியத்திலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டாரே என்பதை

எண்ணி என்னுடைய இதயம் மிகவும் வேதனைப்படுகின்றது. மூத்த சகோதரர்கள் செய்த இச்செயல் நமது ஊழியத்திற்கு ஏற்பட்ட ஒரு களங்கம் அல்லது மாசு ஆகும். இது நம்மை கேள்வி கேட்கிறது.

சமீபத்தில், அந்த 'டிரஸ்டீஸ்', என்பவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று எனக்கு எதிராகவும், சகோ.பால்சுதாகருக்கு எதிராகவும் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். தயவு செய்து எபிரோனுக்காகவும், அதோடு தொடர்புடைய பிற சபைகளின் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய இந்த காலக்கட்டத்தில், உலகெங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களும் விழிப்பாக இருந்து சத்தியத்திற்காக நிற்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். ***தேவனுடைய குறைவற்ற வார்த்தையை (வசனத்தை) நேசித்து அதை உயர்த்தி அறிவிக்கின்ற நாம் யாராக இருந்தாலும் சரி, சகோ. பால்சுதாகருடைய ஊழியத்தைத் தாங்கி, அவரை ஆதரித்து உற்சாகப்படுத்துவது நமது கடமையாகும்.***

சகோ.பக்த்சிங் அவர்கள் சுமார் 21 வருடங்களுக்கு முன்னதாகவே இந்த 'ஸ்தல சபை ஒழுங்கு' எபிரோனில் கொண்டுவரப்பட வேண்டுமென்று விரும்பினார். அதாவது எல்லாச் சபைகளிலும் மூப்பர்கள், உதவிக்காரர்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று விரும்பினார். சகோ.பக்த்சிங் அவர்கள் 'எபிரோன்' (Hebron, Hyderabad) தொடங்கி, ***எல்லாச் சபைகளிலும் இந்த ஒழுங்கு கடைபிடிக்கப்பட வேண்டும் என்பதற்காக*** மூத்த சகோதரர்களாகிய K.பிலிப், சகோ. கோஷி, சகோ. மார்ட்டின், சகோ. லாசர்சன், சகோ.C.E. தாசன், சகோ. அமிர்தராஜ் ஆகிய ஆறு பேர்களை ஏற்படுத்தின, அந்த கூட்டத்தில் நானும் (சகோ. G.T. பெஞ்சமின்) அங்கே இருந்தேன். இதை சகோ.பக்த்சிங் அவர்கள் எபிரோன் மெசஞ்சர் (Hebron Messenger) பத்திரிகையிலும் வெளியிட்டார். இந்த வெளிச்சத்தின் அடிப்படையில்தான் 'ஸ்தல சபை - தெய்வீக ஒழுங்கு' பற்றிய தொடர்ச்சியான வேத போதனை, அதிலும் முக்கியமாக மூப்பர்கள், உதவிக்காரர்கள் ஏற்படுத்தப்படுதலைப் பற்றிய போதனைகளை சபைகளுக்குக் கொடுங்கள் என்று சகோ.பால்சுதாகரை நாங்கள் கேட்டுக் கொண்டோம்.

சகோ. K. பிலிப், சகோ.கோஷி போன்ற மூத்த சகோதரர்கள் தங்களுடைய வெறுப்பு, பொறாமையின் காரணமாகவே சகோ.

பால்சுதாகரை ஊழியத்திலிருந்து நிறுத்தி வைத்து சபையில் குழப்பத்தை உண்டாக்கி விட்டார்கள். மூத்த சகோதரர்களின் இந்தச் செயல் நமது ஊழியத்தில் மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது. விசேஷமாக வாலிபர்கள் மத்தியிலும், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் செய்யும் சுவிஷேச ஊழியங்களிலும் மிகுந்த நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது.

சகோ. பக்த்சிங் அவர்களோடு (1942 முதல்) சுமார் ஐம்பது ஆண்டுகள் ஊழியம் செய்து அவரால் சபையின் மூப்பராக ஏற்படுத்தப்பட்ட தகுதியின் அடிப்படையில் (ஆதாரத்தில்) நான் இதை எழுதுகிறேன். மூன்று தலைமுறைகளாக அந்த ஐக்கியத்திலிருந்த சில சகோதரர்களும், சகோதரிகளும் எபிரோனில் ஸ்தல சபை ஒழுங்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஜெபித்தார்கள். காரியங்கள் இப்படி சீர்கெட்டுப் போனதால் அவர்கள் மிகவும் வேதனையடைந்து, அந்த துக்கமான காரியத்தைக் குறித்து மூத்த சகோதரர்களிடத்தில் கேள்வி கேட்டுப் பார்த்தார்கள். பின்னர் அந்த சகோதர சகோதரிகள் வெகுவாய் ஜெபித்து, பின்னர் கர்த்தரை சமாதானத்துடன் தொழுது கொள்வதற்காக கர்த்தர் தங்களை நடத்தி வந்தபடியே, நான் அறிய பிரிந்து வெளியே வந்தார்கள். கடந்த செப்டம்பர் 5,2006-ல் நடந்த துக்கமான சம்பவத்திற்குப் பிறகு சகோ.பால்சுதாகர் தேவனுடைய சித்தத்தை அறிவதற்காக சில காலம் ஜெபத்தில் தரித்திருந்தார்கள்.

கர்த்தருடைய வசனத்திற்காக நின்று, அதற்கான எந்த விலைக்கிரயமும் கொடுக்க ஆயத்தமாக இருக்கவே பிரிந்து வந்த அந்தச் சகோதரர்களுடன் இணைந்து ஊழியம் செய்யும்படி சகோ. பால்சுதாகர் கர்த்தரால் ஏவப்பட்டார். ***நமது சகோ. பால்சுதாகர் அவர்கள் ஒரு புதிய சபையை ஏற்படுத்தி விட்டார், பிரிவினையை ஏற்படுத்தி விட்டார் என்று அவர்மேல் குற்றம் சுமத்தியது முற்றிலும் பொய்யானது.***

நமது ஆவிக்குரிய சகோ.பால்சுதாகர் அவர்களை சந்தோஷமாக ஊழியத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உலகமெங்குமுள்ள பரிசுத்தவான்களை கேட்டுக் கொள்கிறேன். அவரை நமது ஐக்கியத்திலிருந்து விலக்கி வைத்த அந்தப் பாவமான தீர்மானத்திற்கு இணங்காமல் இருக்கும்படி தேவ மகிமைக்காகவும் பரிசுத்தவான்களின் சபையின் பக்தி விருத்திக்காகவும் வேண்டிக் கொள்கிறேன்.

மேலும் விவரங்கள் அறிய வேண்டுமானால் தாராளமாக என்னோடு நீங்கள் தொடர்பு கொள்ளவும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள் உங்கள் : **சகோ.G.T. பெஞ்சமின்**

மூப்பர், எபிரோன் ஐதராபாத், தொலைபேசி எண்: 040 2761 3066.

Dear Brothers and Sisters In Christ,

Loving greetings in the name of our exalted Saviour Lord Jesus Christ, Who is the true builder of His Church.

With a heavy heart I am penning these few lines on the hasty EXPULSION of Bro. Paul Sudhakar from our fellowship and ministry that happened on September 05, 2006 is the most devastating event that ever took place in the history of Hebron Fellowship. On Sept 05 2006, a conspiracy was hatched by a few trustees and few senior full-time workers and a meeting was called for however I was not invited to attend this meeting. Sensing foul play I cancelled my other engagements to be present for this meeting, what transpired is now History. My repeated appeals not to condemn and expel our brother went in vain. The expulsion engineered by them was purely out of jealousy. All the accusations they brought against Bro. Paul Sudhakar were malicious and false. Later they went on to clandestinely publish and print in the Hebron Messenger and circulate it around the world without even taking my consent about those publications, of which, I am the authorized printer and publisher. Their only intention was to defame Bro. Paul Sudhakar and accuse him of teaching a new doctrine that was contrary to the convictions and practices of Bro.Bakht Singh. It is a pure lie. In fact, the reading of the article 'Local Church – Divine Order' would convince any unbiased reader that it is totally in support of Bro.Bakht Singh teachings and convictions more so the plainly revealed scriptures. Later I had extended talks with all the senior brethren to 'defuse' the stalemate. I even suggested that we should send the article on 'Local Church' to godly men across the world for their opinion to which they flatly disagreed. Later they agreed, though not publicly, that Bro. Paul Sudhakar's writings were totally 'correct' and 'scriptural'. Over these 10 months, what I have seen is that it was only their spite and jealousy that made these 'senior' brethren to expel Bro Paul Sudhakar. My heart is grieved that a true servant of God who preaches the word without fear or favor is put out of our fellowship. It is a blot that has come to stay and question us!

Of late these trustees have gone to the court against me and Bro. Paul Sudhakar. Please pray for Hebron and the ministries associated with it.

I humbly appeal to all saints across the world to wake up and stand for the Truth in this decisive hour. As those who love and promote the truth of His Infallible Word, it is our duty to support and encourage the ministry of Bro. Paul Sudhakar.

HEBRON Golconda X Roads Phone: 63066 HYDERABAD-500020 A.P.

(G. T. Benjamin)

ELDER
HEBRON,
Golconda Cross Roads,
HYDERABAD-500020.

Bro. Bakht Singh wanted this local church order to be brought in Hebron about 21 years ago i.e., to appoint Elders and Deacons in all the churches. I was personally present in that meeting and he appointed 6 senior servants of God Bro.K.Philip, Bro.Koshy, Bro.Martin, Bro Lazarsen, Bro. C.E.Dawson, and Bro.Amritraj to bring this order into operation in all the churches in our fellowship starting from Hebron which he himself published in the Hebron Messenger. In the light of this, a year ago we requested Bro. Paul Sudhakar to give a series of teaching on 'Local Church – Divine Order', essentially concerning the appointing of Elders and Deacons in our local churches. It is only out of spite and jealousy that these 'senior servants' like Bro.Philip and Bro.Koshy have created this confusion in the church to stop him from ministering in our fellowship. This has caused great loss and much confusion in our work, particularly in the ministry among the young people and evangelism in India and abroad.

I am writing this in the capacity of an anointed Elder who is ordained by Bro.Bakht Singh and has served with him for more than 50 years (since 1942). A few brothers and sisters who were in our fellowship from three generations, praying for this local church order to be set up in Hebron, were deeply grieved with the turn of the events, questioned the senior brothers about this sad episode. Later these brethren after much prayer as the Lord led them went out to worship the Lord in peace with my knowledge. Bro. Paul Sudhakar after the sad episode on 5th September, 2006, went into a season of prayer to ascertain the will of the Lord. Later, he was led by the Lord to join these brothren who stood for God's Word and who were ready to pay any price for it. The accusation that our brother started a 'new' church and engineered the split is totally false. I appeal to the saints world-wide to receive him gladly and not be one with this ungodly decision of expelling our brother Paul Sudhakar from our fellowship for the glory of God and for the edification of the saints of the church.

Please feel free to contact me for further clarifications.

May God be with you,

Yours in Christ.

HEBRON (Golconda X Roads) Phone: 63066 HYDERABAD-500020 A.P.

(Bro.G.T.BENJAMIN)
Elder,
HEBRON.

ELDER
HEBRON,
Golconda Cross Roads,
HYDERABAD-500020.

இணைப்பு - 11

"It is one of the sadest things that often the greatest enemies of the Bible have been, men who called themselves Christians and Leaders of the church. Juest as it was the religious leaders who crucified Jesus, so it has been religious men who have persecuted those who have worked to make God's Word known." (Page 21 of the Book "The Amazing Story of The BIBLE)

"தங்களை கிறிஸ்தவர்களென்றும், மதத்தலைவர்களென்றும் அழைத்துக் கொள்ளுகிற மனிதர்களே அவ்வப்போது பரிசுத்த வேதாகமத்திற்கு மிகப்பெரிய சத்துருக்களாயிருக்கிறார்களென்பது மிகவும் துக்கமான சம்பவங்களிலொன்றாகும். (அந்நாட்களில்) யூத மதத்தலைவர்களே இயேசுவை சிலுவையிலறைந்ததைப்போல, (இந்நாட்களிலும்) தேவனுடைய வார்த்தையைத் தெளிவாய்ப் போதிக்கிறவர்களை, மதத்தலைவர்கள் என்பவர்கள் துன்பப்படுத்தி, சித்திரவதை செய்கிறார்கள்''. ('பரிசுத்த வேதாகமத்தின் ஆச்சரியமான கதை' என்ற புத்தகம்)

இணைப்பு - 12

SPIRITUAL AUTHORITY

"At what poinet does it become necessary to obey God rather than man? Peter siad by the Spirit, "Submit yourselves to every ordinance of man for the Lord's sake," 1Peter 2:13 and yet to the Sanhedrin, the supreme authority of his people he sated, "We ought to obey God rather than men." Acts. 5:29.

The authority of the state has divine backing but if they exceed that authority, as did the sanhedring in forbidding the apostles to preach (in Jerusalem) in Jesus name, and Saul in denying food to his son and soldiers, then they are not to be obeyed. Some times it may be difficult to know what to 20, but there is honey in obeying God 26th". Honey out of the Rock' by....

ஆவிக்குரிய அதிகாரம்

''மனிதனைக் காட்டிலும் தேவனுக்கு கீழ்ப்படிவது எப்பொழுது அவசியமாகிறது? ஆவியானவராலே பேதுரு சொன்னார் : ''நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்'' (1பேது.2:13). என்ற போதிலும், தன்னுடைய ஜனத்தாரின் உயர் அதிகாரமுடைய சனிகரிம் சங்கத்திற்கு முன்பாக, ''மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது''என்றார் (அப்.5:29).

ஒரு நாட்டினுடைய அதிகாரத்திற்கு தேவனுடைய அங்கிகாரம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அந்த அதிகாரம் உடையவர்கள் அதை மீறி, சனகரிம் சங்கம் அப்போஸ்தலர்களை எருசலேமில் இயேசுவின் நாமத்தைப் பிரசங்கிக்க விடாமல் தடை செய்தது போலவும், சவுல், தனது மகன் யோனத்தானும், மற்ற வீரர்களும் ஆகாரம் (தேன்) சாப்பிடத் தடை செய்ததும் போலவும் செயல்படுவார்களானால், அப்படிப்பட்டவர் களுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை. சில சமயங்களில் என்ன செய்வது என்று அறிவது கடினமாயிருக்கலாம். ஆனாலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதில் தேன் உண்டு. (ஆசீர்வாதம் உண்டு) ''கன்மலையிலிருந்து தேன்'' - பிப்ரவரி - 26

இணைப்பு - 13

(சகோ. வாச்மேன் நீ அவர்கள் எழுதின "ஒரு சாதாரண கிறிஸ்தவ ஊழியர்' (The Normal Christian Worker") என்ற புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி (பக்கம் 57 முதல் 60 வரை)

"நம்மிடத்திலுள்ள "நான்" என்னும் அகங்காரம் (EGO) தேவனால் நமக்கு வெளிப்படுத்தப்பட்டு, கண்டிப்பான முறையில் தேவனால் நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில், நாம் தேவனுடைய கரத்தில் தகுதியான கருவிகளாயிருந்து மற்றவர்களுடைய வாழ்க்கையில் நடவடிக்கை எடுக்க முடியாதவர்களாய் ஆகிவிடுவோம். தேவனுடைய கரத்தால் வனையப்படாத (Moulded) ஒருவனுடைய கரத்தில், மற்றவர்களை அவன் வனையும் (நடத்தும்) பொறுப்பை தேவன் ஒப்படைக்க மாட்டார். தேவனுடைய சித்தத்தை தெளிவாகப் பகுத்துணர்ந்து அதைச் செய்யக் கற்றுக் கொள்ளாத ஒருவனிடம், மற்றவர்கள் தேவசித்தத்தை அறியும்படி நடத்தும் பொறுப்பை தேவன் அவனுக்குக் கொடுக்கப்பது இயலாத காரியம்.

"நாம் நல்ல மேய்ப்பர்களாக இருக்கவேண்டுமானால், தேவன் நம்மை மிகவும் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டியதாய் இருக்கிறது. ஏனென்றால், அகந்தையுடன் அதிகாரம் செலுத்தும் நமது சுபாவங்களானது (Domineering Natures) மந்தையை ஒன்று சேர்ப்பதற்குப் பதிலாக, சிதறடிக்கும் தகுதியுடையது. நம்முடைய கவனிப்புக்கு ஒப்படைக்கப்பட்டவர்களை நாம் இறுமாப்பாய் ஆளுகிறவர் களாயிராமலும், அவர்கள் பின்பற்றிவரும் தகுதிக்கு மிஞ்சி அவர்களை நடத்தாமல் இருக்கவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தரிடத்திலிருந்து நமக்கு ஒரு பாரம் (Burden) இருக்குமானால், நாம் அதைச் செய்வதில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஆனால், நாம் கொடுக்கும் செய்தியை (Message) மற்றவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று அழுத்தக் கூடாது. தேவன் ஒரு மனிதனுக்குக் கொடுத்திருக்கிற சுயாதீன சித்தத்தை (Free - will) அவர் கனம் பண்ணுகிறார் என்பதையும், அவர் ஒருபோதும் மனிதனை பலவந்தமாய்க் கீழ்படிய செய்கிறவர் அல்ல என்பதையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படியிருக்க நாம் அதைச் செய்ய எப்படித் துணியலாம்?

இணைப்பு - 14

ORGANISATION ABOVE THE CHURCH

சபைக்கு மேலாக ஸ்தாபனம்

இன்றைக்கு தனிப்பட்ட சபைகளுக்கு மேலாக ஒரு பெலமான ஸ்தாபனஸ்தானம் இருப்பதை அநேக சபைகளில் காண முடிகிறது. முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனம் இருந்ததில்லை.

அப்போஸ்தலர்கள் கூட, அவர்கள் ஸ்தாபித்த சபைகளில், அந்த சபைகளின் தீர்மானங்களை மதித்து, கனம் பண்ணினார்கள் என்று புதிய ஏற்பாடு நமக்குக் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டிலுள்ள அப்போஸ் தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில், அந்தியோகியா சபையானது தனது முதலாம் மிஷனெரி பிரயாணத்தை ஆரம்பிக்க, எருசலேம் சபையின் அனுமதியைக் கேட்கவில்லை. பவுலும் கூட, ரோம சாம்ராஜ்ஜி யத்திலுள்ள புறஜாதியாருக்கு இரட்சிப்பின் செய்தியைப் பிரசங்கிக்கும்முன், பேதுருவைக் கலந்து ஆலோசிக்கவில்லை.

அந்நாட்களில், சபையானது, கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட ஜீவனுள்ள ஒரு சரீரத்தைப் (Like a Living Body) போலிருந்தது. சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும் (விசுவாசியும்) மற்ற அவயவத்தைப் போலவே முக்கியத்துவம் உள்ளதாயிருந்தது. ஒரு அவயவம் தனது அனுபவத்தை மற்ற அவயவத்தோடு பகிர்ந்து கொண்டு, இருவரும் ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ச்சியடைந்தார்கள். ஒவ்வொரு அவயவமும் மற்ற ஒவ்வொரு அவயவத்திற்கும் உதவிசெய்யும் பொறுப்பையுடைய தாயிருந்தது. ஒவ்வொருமுறையும் சபைகூடி வரும்போது, ***இயேசு கிறிஸ்துவே மையமாக*** இருந்தார். சங்கீதங்களையும், ஞானப்பட்டுகளையும் அவர்கள் பாடும்போதும், வேதவாக்கியங்களை வாசிக்கும்போதும், அப்பத்தைப்பிட்டு, திராட்ச ரசத்தைப் பானம் பண்ணும்போதும், கிறிஸ்துவைப் பற்றியே அவர்கள் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

சபையிலுள்ள தலைவர்களுக்கும் (Leaders) அங்குள்ள மற்ற விசுவாசிகளுக்கும் எந்தவித முக்கியமான வித்தியாசமும் இல்லாதிருந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் தேவனைச் சந்தித்தார்கள்.

<u>CHURCH BUILDINGS:</u> <u>சபை கட்டிடங்கள்</u>: முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனைக்காக வழக்கமாக வீடுகளில் கூடி வந்தார்கள்.

அப்படிப்பட்ட எளிமையும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு ஐக்கியம் இன்று எவ்வளவாய் மாறிவிட்டது! என்றாலும், இன்றைய சபைகள் மிகவும் வித்தியாசமாக இருக்கின்றன. அவைகள் இன்று முற்றிலும் ஸ்தாபனங்களாக மாறி, காரியங்களைச்செய்து கொண்டிருக்கின்றன. என்றபோதிலும், அடிக்கடி ஒரு காரியம் மட்டும் இல்லாமலிருக்கிறது. அதுதான் "ஜீவன்" (LIFE).

By
DALE RHOTON
From : Divisions in Christianity
(கிறிஸ்தவத்தில் பிரிவினைகள்)

சிந்தனைக்கு

"காதுள்ளவன் கேட்கக் கடவன்" வெளி. 2:11

சிந்திக்கத் திராணியுள்ளவன் சிந்திக்கக் கடவன்.

சிந்திக்க வேண்டிய காரியங்கள்

சகோ. பால்சுதாகர், தேவனுடைய ஊழியத்தைச் செய்கிற தேவ ஊழியர். அவர் இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் சென்று, தேவனுடைய சுவிசேஷத்தை தைரியமாய்ப் போதித்து அநேகரை, விசேசமாய் வாலிபர்களை இரட்சிப்புக்குள் நடத்தியும், தேவ கிருபையால் சபைகளை ஸ்தாபித்தும், சபைகள்தோறும் வேத வசனத்தின் ஆதாரத்திலே தேவ செய்தியைக் கொடுத்தும், ஆரோக்கியமான உபதேசத்தைக் கலப்பில்லாமல் பேசி, சத்தியத்தை நிதானமாகப் பகுத்துப் போதித்தும், இவ்விதமாய் சபைகளை ஸ்தரப்படுத்திவரவும், தேவன் இந்நாட்களில் வல்லமையாய் உபயோகித்து வரும் பாத்திரம் என்பதை எல்லாரும் நன்றாக அறிவோம். அந்த நிலையில், "சபையின் தரிசனத்தை" வேத வசனத்தின் வெளிச்சத்திலும், சகோ. பக்த்சிங் போன்ற பரிசுத்தவான்கள் "சபையின் தரிசனத்தை" கற்றுக் கொடுத்தது மாத்திரமல்லாமல் கைக்கொண்டு வந்த, அனுபவங்களின் வெளிச்சத்திலும் தெளிவு பெற்றவராய், சபைகளில் "குறைவானவைகளை ஒழுங்குபடுத்தும்படி" பரிசுத்த ஆவியானவர் தந்த பாரத்தின் ஆதாரத்திலே, அவர் ("Local church-Divine Order") "ஸ்தல (உள்ளூர்) சபை - தேவ ஒழுங்கு" என்ற தலைப்பில், அநேக சபைகளில் வேத ஆராய்ச்சி அல்லது செய்தியாகப் போதித்திருக்கிறார். விசுவாசிகளில் அநேகருக்கு, இது புதுமையாகவும், அதே சமயத்தில் வேத வசனத்தின் ஆதாரத்தில் போதிக்கப்பட்ட படியாலும், விரும்பிக் கேட்டுக் கற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து கற்றுக் கொடுக்க வேண்டு மென்று, சபைகளிலிருந்து அழைப்புக் கொடுத்தார்கள். சகோ. G.T.பெஞ்சன்மின் அவர்களும் இதை வரவேற்று, சகோ. பக்த்சிங் அவர்களால் போதிக்கப்பட்டு, சாதிக்கப்பட்ட இந்த சத்தியம், பின்னாட்களில் மறுக்கப்பட்டு, மறக்கப்பட்டுப் போனதை உணர்ந்தவராய், இந்நாட்களில் இந்த சத்தியம் எங்கும் பரவவேண்டும், சபைகள் உயிர்மீட்சி அடைய வேண்டும் என்ற பாரம் கொண்டவராய், சகோ. பால் சுதாகர் அவர்களை உற்சாகப்படுத்தி, சபைகளில் இந்த சத்தியத்தைப் பேச அழைத்துச் சென்றார். ஏன்? சேர்மன் அவர்கள் கூட,

'இது சரியான சத்தியம்தான். தொடர்ந்து பிரசங்கி' என்று கூறியுள்ளார்கள். (பக்கம் 6)

"ஆரோக்கியமான," அதே சமயத்தில் அவசியமுமான இந்த அடிப்படைச் சத்தியத்தால் கவரப்பட்ட சபையாரில், ஆர்வமும், துடிப்புமுள்ள சகோதரர்கள் இதை அனைவரும் அறிந்து, சபைகள் பக்தி விருத்தி அடையவேண்டுமென்ற பாரத்தோடு, (Web site) வெப்சைட்டில் இதை அறிமுகப்படுத்தினார்கள். *ஆனால் இந்த சத்தியத்தைச் சொன்னது 'குற்றம்' என்று சொல்லி, சகோ. பால் சுதாகர் அவர்களை சபையைவிட்டு நீக்கிவிட்டார்கள்.* அவர் சொன்ன உபதேசமான "Local Church - Divine Order" "ஸ்தல (உள்ளூர்) சபை - தெய்வீக ஒழுங்கு" தமிழாக்கத்தை நீங்கள் அநேகர் வாசித்திருப்பீர்கள். இல்லையெனில் வாங்கிப் படித்து அறிந்து கொள்ளுங்கள். அவருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையைத்தான் நீங்கள் இந்த புஸ்தகத்தில் வாசித்தீர்கள்.

இப்பொழுது, இந்த இரண்டு புஸ்தகங்களையும் தேவபயத்தோடும், உத்தம இருதயத்தோடும், வேத வசனத்திற்கு நடுங்கும் நடுக்கத்தோடும், ஆவியானவரின் ஆளுகையோடும், நடுநிலைமை யோடும் வாசிக்கிற எந்த ஒரு விசுவாசிக்கும் *கீழேவரும் நியாயமான கேள்விகள் உள்ளத்தில் எழாமலிருக்க வாய்ப்பில்லை.*

1) முதலாவதாக சகோ. பால் சுதாகர் அவர்கள் போதித்த இந்த உபதேசம், சத்தியத்தின்படி சரியா அல்லது தவறா? அவர் வேத வசனத்தின் ஆதாரத்திலும், சகோ. பக்த்சிங் அவர்கள் 'எபிரோன் மெசஞ்சரில்' எழுதின எழுத்துக்களின் ஆதாரத்திலும், சகோ. T.E.கோஷி எழுதின புத்தகத்தின் ஆதாரத்திலும், சிறந்த வேத போதகரான சகோ. A.J.பிளாக் (A.J.Flack) போன்ற பரிசுத்தவான்களின் கருத்தின் ஆதாரத்திலும் சொல்லப்பட்ட உண்மைகளைத்தானே எழுதியுள்ளார். (ஸ்தல சபை - தெய்வீக ஒழுங்கு - பக்கம் 5-12)

அந்த உண்மைகளைச் சொன்னதற்காக சகோ. பால்சுதாகர் அவர்களை சபையை விட்டு நீக்கினால், ஏற்கனவே இதே கருத்துக்களைத் தனது புஸ்தகத்தில் எழுதி, உலகறியச் செய்த சகோ. T.E. கோஷி அவர்களையும் சபையிலிருந்து ஏன் நீக்கவில்லை? ஆளுக்கொரு நீதியா? (பக்கம் 9,10). ஆரம்பத்தில் 'நீ போதிக்கிறது

சரிதான், அதைத் தொடர்ந்து செய்' என்று அனுமதித்துவிட்டு, இன்று அது குற்றம் என்று சொல்லுகிற சேர்மன் அவர்களை ஏன் சபையிலிருந்து நீக்கவில்லை. ஏறவிட்டு ஏணி எடுப்பது நியாயமா? (இந்த புத்தகம் - பக்கம் 6)

ஒரு விசுவாசியை சபையைவிட்டு விலக்க (Excommunicate) அல்லது சபைக்குப் புறம்பாக்க, பரிசுத்த வேதாகமம் கூறும் காரணங்கள்:

அ) ஒரு சகோதரனுக்கு விரோதமாய்க் குற்றம் செய்த இன்னொரு சகோதரன், தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளாவிட்டால்............... சபைக்கும் செவிகொடாவிட்டால்.......... மத் 18:15-17

ஆ) கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினை, இடறல் உண்டாக்கினால்.... ரோமர் 16:17

(நாம் சகோ. பக்த்சிங் அவர்களின் ஊழியத்தின் மூலம் வேதவசனத்தின் ஆதாரத்தில்தான் ஊழியம் செய்ய வேண்டும், போதிக்க வேண்டுமென்று கற்றுக்கொண்டோம். அவர் வேத வசனத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தார். அவருக்கென்று 'செல்லப்போதனை' (Pet Doctrine) ஒன்றும் கிடையாது. அதைத்தான் சகோ. பால்சுதாகரும் கூறியிருக்கிறார்.)

இ) சகோதரன் ஒருவன், விபச்சாரம், பொருளாசை, விக்கிரக ஆராதனை, உதாசினன், வெறியன், கொள்ளைக்காரன் - இப்படி இருந்தால் - 1 கொரி 5:11

ஈ) அப்போஸ்தலருடைய போதனையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரனையும் விட்டு விலகு. 2 தெச. 3:6

உ) வேத புரட்டனாயிருக்கிறவன். தீத்து 3:10

ஊ) கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராதவன் (2 யோ. 9-11)

மேலே சொல்லப்பட்டவைகளிலில், எந்தக் குற்றத்திற்காக சகோ. பால்சுதாகர் சபையிலிருந்து நீக்கப்பட்டார்? ஒரு குற்றமுமில்லையே! அப்படியானால் சத்தியத்தைச் சொன்னதிற்கு தண்டனையா? இதன் மூலம் இவர்கள் நம்மை மறுபடியும் பழைய ஏற்பாட்டிற்கல்லவா அழைத்துச் செல்கிறார்கள்?

சகோ. கோஷி சொல்கிறார் (வெப்சைட்)

"***சகோ. பால்சுதாகர் எழுதின கருத்துக்களில் எந்தவித தவறும் இல்லை. நாங்களும் அதைச் செய்ய முயற்சிக்கிறோம்.*** ஆனால் காரணம் அதுவல்ல. அவர் மூத்த சகோதரர்களின் ஆலோசனையைக் கேட்காமல் செய்து விட்டார். அதுதான் தவறு என்று மூத்த சகோதரர்கள் சொல்லுகிறார்கள்" என்று. யார் இந்த மூத்த சகோதரரர்கள்? சரி, தேவனால் நடத்தப்படுகிற ஊழியர் தன்னுடைய ஒவ்வொரு பிரசங்கத்திற்கும் அல்லது கருத்திற்கும் மூத்தவர்களிடத்தில் கேட்டுத்தான் செய்ய வேண்டுமா? அல்லது பரிசுத்த ஆவியானவருடைய நடத்துதலின்படி செய்ய வேண்டுமா? இந்த மூத்த சகோதரர்கள் எப்படிப்பட்ட ஆவிக்குரிய தகுதியுடையவர்கள்? இத்தனை வருசம் இந்த சத்தியத்தைத் தடைசெய்து, அதைப் போதிக்கவிடாதபடி கவனமாயிருந்தவர்கள், இனிமேல் போதிக்க அனுமதிப்பார்களா?

சீர்திருத்தவாதியான ***மார்ட்டின் லுத்தர் அவர்கள்,*** தேவன் தனக்கு வசனத்தின் ஆதாரத்தில் கொடுத்த வெளிச்சத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்த ***போப்பாண்டவரிடம்*** அனுமதிகேட்டுச் செய்திருந்தால், பதவி ஆசை கொண்டு ***தன்னையே 'ஆண்டவர்'*** என்று அழைத்து சுகபோகமாய் வாழ்ந்து கொண்டிருந்த 'போப் ஆண்டவர்' அனுமதி கொடுத்திருப்பாரா? தேவனுடைய சத்தியத்தைச் சொல்ல யாருடைய அனுமதி தேவை? (அப். 4:16-20; 5:27-29). மனுஷருக்குக் கீழ்படிவதைகாட்டிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியம்.

சரி, மூத்த சகோதரரிடத்தில் அனுமதி பெறாமல் செய்தது தவறு என்று சொல்லுகிற வாதத்தை நாம் ஒரு வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால், ***சகோதரர் பால் சுதாகர் அவர்களை, விலக்கி வைத்த செய்தியை 'எபிரோன் மெசஞ்சர்' பத்திரிக்கையில் (Editor) பத்திரிக்கையின் பதிப்பாசிரியர் அவர்கள், பத்திரிக்கையை வெளியிடுபவரைக் (Publisher) கேளாமலேயே பிரசுரித்து, இந்த செய்தியை உலகறியச் செய்தது ஏன்? இது மட்டும் நியாயமா? அப்படியானால் பதிப்பாசிரியரை*** ஏன் சபைகளை விட்டு நீக்கி வைக்கவில்லை? அந்த அதிகாரம் யாருக்கிருக்கிறது? ஆளுக்கொரு நீதியா?

மேலும், ஏப்ரல் 1, 2007 'எபிரோன் பெமசஞ்சரில்', ஐந்து டிரஸ்டீஸ்களில் ஒருவரும், மூத்த டிரஸ்டீயுமானவரைப் பற்றி குறை கூறி, அந்த பப்ளிசருக்கே தெரியாமல் எபிரோன் மெசஞ்சரில் எடிட்டர் வெளியிட்டாராமே! அதுமட்டும் குற்றமில்லையா? பத்திரிக்கையை வெளியிடுபவரின் ஆலோசனையைக் கேட்காமல் வெளியிட்ட பதிப்பாசிரியர் குற்றவாளிதானே? பதிப்பாசிரியரை ஏன் சபைகளை விட்டு இன்னும் நீக்கவில்லை? யார் நீக்குவது? மேலும், அந்த ஏப்ரல் 1, 2007ம் ஆண்டு 'எபிரோன் மெசஞ்சர்' பிரதிகள் யாவும் சந்தாதாரர்களுக்கு விநியோகிக்கப்படாமல் நெருப்பிலிட்டு கொழுத்தப்பட்டு சாம்பலானதாகப் பேசப்படுகிறதே! தேவனுடைய பணத்தை இப்படி வீணாக்கலாமா? யார் கேட்பது? இவர்களைக்கேட்க யாருக்கும் அதிகாரமில்லை பாருங்கள்! ***ஆனால் தேவன் கேட்பார்!***

"வேத பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் துன்மார்க்கரைப் புகளுகிறார்கள். வேத பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களோ, அவர்களோடே போராடுகிறார்கள்". நீதி 28:4.

எபிரோனில் நடக்கிற பாவத்தைக் கண்டித்து, அதை நீக்காமல் இருந்து கொண்டு, சத்தியத்தைச் சொல்லுகிறவர்களை சபைகளை விட்டு நீக்குவதும், அப்படிப்பட்டவர்களோடு ஐக்கியப் படுகிறவர்களை நீக்குவதும் பாவமல்லவா? இப்படியே விட்டால், இந்த மூத்த ஊழியர்கள், பரலோக ராஜ்ஜியத்திலும் போய், "பால் சுதாகரும் அவரைச் சேர்ந்தவர்களும் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கக் கூடாது," என்று விலக்குவார்கள். தேவன் அதற்குச் சம்மதிக்காவிட்டால், தேவனையும் பரலோக ராஜ்யத்தை விட்டுத் தள்ளிவிட்டு தேவனுடைய சிங்காசனத்தையே அபகரிப்பார்கள் போலும்! (லூசிபர் போல்)

குறிப்பு : பக்கம் 31ல் சொல்லப்பட்டபடி, சகோ. G.T. பெஞ்சமின், சகோ. பால்சுதாகர் இவர்கள் மேல் இந்த 'டிரஸ்டீஸ்' கோட்டில் கேஸ் போட்டுவிட்டார்கள். O.S. No. 127 OF 2007 (அசல் வழக்கு எண் O.S.No.127)

நாம் சிந்தித்து செயல்படுவோம்!
சத்தியத்திற்கே கீழ்ப்படிவோம்!!

2007ம் வருட வாக்குத்தத்தப் பாடல்

மத்.14:27; 2நாளா.20:15; 2தீமோ.2:1

பல்லவி

திடன் கொள்ளுங்கள் நீங்கள் திடன் கொள்ளுங்கள்
நான்தான் பயப்படாதிருங்கள் } 2

சரணங்கள்

1. **திடனற்றுப் போகச் செய்யும் காரியங்கள் வரலாம்**
திடவிசுவாசம் விடும் காலங்களும் வரலாம் } 2
திடமனதாயிருந்து காரியத்தை நடத்து
உத்தமனுக்குக் கர்த்தர் துணை இதை நம்பு } 2 - **திடன்**
(ஏசா.37:1-3; யோவா.16:33; மத்.14:36; 2நாளா.19:11)

2. **பயப்பட வேண்டாம், கலங்கிட வேண்டாம்**
பரிசுத்தத்துணிவு விசுவாசத்துடனே
பகைவனை ஆவியின் பட்டயத்தால் வெல்லு
பதரைச் சுட்டெரிப்பவர் உன்பக்கம் நம்பு - **திடன்**
(2நாளா. 20:15; 1சாமு.17:37-51; எபே.6:17; மத்.3:12)

3. **பெருங்கூட்டத்தைக் கண்டு பயப்பட வேண்டாம்**
பெருங்கூட்டம் தீமை செய்யும், சேர்ந்திட வேண்டாம்
சிலரே இடுக்கமான வாசலில் செல்பவர்
சிறு மந்தையோடு நின்றார் இயேசு இதை நம்பு - **திடன்**
(1ராஜா. 20:10; யாத்.23:02; மத்.7:13,14; லூக்.12:32)

4. **சத்துரு வெள்ளம்போல் உள்ளே வருவான்**
சத்தியத்தை உரைக்கத் தடை பல செய்வான்
சத்தியத்தை விற்றிட தந்திரங்கள் செய்வான்
சத்தியமாம் கிறிஸ்து ஜெயிப்பவர் நம்பு - **திடன்**
(ஏசா.59:19; அப்.13:8:11; நீதி.23:23; யோவா.14:6)

5. **தானியேல் போன்றோர்கள் தள்ளப்பட்டார்கள்**
எரேமியாவின் சொல்லை எதிர்த்து நின்றார்கள்
பவுலின் போதனையால் புறம்பாக்கினார்கள்
இவர்கள் தேவன் என்றும் உன் தேவன் நம்பு - **திடன்**
(தானி. 3:21; 6:16; எரே.18:18; அப்.21:30; 22:22)

6. **கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில்பலப்படு**
கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தில் பலப்படு
கர்த்தரின் சத்துவ வல்லமையால் பலப்படு
பலப்படுத்தும் கிறிஸ்து பலத்தவர் இதை நம்பு - **திடன்**
(2தீமோ.2:1; ரோ.4:19; எபே.6:10; பிலி.4:13)

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே;
அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை (புலம்பல் 3:22, சங்.118:17)

பல்லவி

கிருபைதான் தேவா, இன்று நான் பிழைத்திருப்பது-2
பிழைத்திருப்பது, உம்மில் நிலைத்திருப்பது - 2

சரணங்கள்

1. அழிவு நெருங்கும் நேரத்தில் நீர் அருகில் நின்றிட்டீர் *அப்.27:20-24*
குழியில் இறங்க நேரும் போது கூட இருந்திட்டீர் *ஆதி. 37:22-*
விழியில் கண்ணீர் பெருகும்போது கரத்தால் துடைத்திட்டீர்
பழிகளெல்லாம் நீக்கி என்னைப் பாது காத்திட்டீர் *ஏசா.25:8*
பாவம் நீக்கிட்டீர்! எந்தன் சாபம் போக்கிட்டீர்! - 2 - கிருபை
ஏசா.43:25

2. திக்கற்றுத் தவிக்கும் போது திசையைக் காட்டினீர் *யோவா.14:6*
திடனற்றுத் திகைக்கும்போது திடப்படுத்திட்டீர் *யோசு.1:9*
பெலனற்று நான் சாயும் போது பெலப்படுத்திட்டீரர்
பெயர்சொல்லி அழைத்து என்னைப் பெருமைப்படுத்திட்டீர்
ஏசா. 43:1
ஆசீர்வதித்திட்டீர்! என்னை ஆண்டு நடத்திட்டீர் - கிருபை
ஆதி. 12:2-3

3. நம்பினோர் கைவிட்ட போது நண்பனாகிட்டீர் *1சாமு.30:4,6*
வெம்பி அழுது ஏங்கும்போது வேண்டுதல் கேட்டீர்
துரோகங்கள் பெருகும்போது துணையாய் நின்றிட்டீர் *ஆதி.42:21*
துணிவுடனே சாட்சிபகரத் தவணை தந்திட்டீர் *அப்.23:11*
வாக்குத் தந்திட்டீர்! உம் வசனம் தந்திட்டீர்! - கிருபை

4. வியாதிப்படுக்கை நீக்கி என்னை முற்றும் காத்திட்டீர் *சங்.41:5-10*
வியாகுலங்கள் போக்கி விசுவாசம் தந்திட்டீர் *2ராஜா.20:1-6*
மரணம் வாசல் மட்டும் வந்தும் விலகச் செய்திட்டீர்
'மரண தூரம் ஓர் அடி' என்றாலும் காத்திட்டீர் *1சாமு.20:3*
உம் ஜீவன் தந்திட்டீர்! என் ஜீவன் காத்திட்டீர்! -கிருபை
எசேக். 16:6

5. நிந்தை, அவமானம் தாங்க கிருபை தந்திட்டீர் *யோபு 19:3*
நீசக்குற்றச் சாட்டுகளை நீக்கி வென்றிட்டீர் *ஏசா. 54:17*
மோசம் போக்கும் பாச வார்த்தை உணரச் செய்திட்டீர்
நாசம் அடையாமல் என்னை நாட்டியேவிட்டீர் *மத்.26:50*
பாசம் காட்டினீர்! பரிந்து பேசினீர் - கிருபை *எரே.24:6*

6. தனிமையாக ஒதுக்கப்பட்டுத் தள்ளப்பட்டேனே, *2தீமோ.4:16,17*
தண்டனைக்குரியோரால் தண்டிக்கப்பட்டேனே, *அப். 28:30*
''சத்தியத்தைச் சொன்னதால் சத்துருவானேனே,'' *கலா.4:16*
''சத்யவான் எவனும் எந்தன் சத்தம் கேட்பானே,'' *யோவா. 18:37*
சத்தியம் நீரே! என் சகலமும் நீரே! - கிருபை

7. தாயின் வயிற்றில் தோன்றின காலம் முதற்கொண்டு, *ஏசா.46:3,4*
தரணியில் இம்மட்டும் என்னை கர்த்தர் காத்திட்டீர் *1யோ.5:11*
முதிர்வயது வரைக்கும் தாங்க வாக்கும் தந்திட்டீர் *1சாமு.7:12*
முடிவில்லாத நித்ய ஜீவனையும் வழங்கிட்டீர் *மத். 1:23*
எபிநேசர் நீரே! இம்மானுவேல் நீரே - கிருபை

"சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், இதுவரைக்கும் என்னத்திற்கு துன்பப்படுகிறேன்? அப்படியானல் **சிலுவையைப்பற்றி வரும் இடறல்** ஒழிந்திருக்குமே." கலாத்தியர் 5 : 11

"தாவீது தன் காலத்திலே **தேவனுடைய சித்தப்படி** அவருக்கு ஊழியம் செய்த பின்பு..." அப்போஸ்தலர் 13: 36

"மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியம் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் **தேவனுடைய சித்தத்தின்படி** செய்யுங்கள்."

எபேசியர் 6 : 6

Diocesan Offset Press, Palai. Ph : 2573182